மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

1 - 5 - 54

TANJORE BOOKS M
DEALERS IN OLD BOOKS
NEAR KAPALI TEMPLE, MYL

என்னும் செல்லால் அரிக்
ப், பழமை எனும் புழுதி
படியப்பட்டுக், கொடுமை
குண்டுகளால் துளைக்கப்பட்
ய்ந்த சமூகத் தராசில் அற்பத்
க்கு விற்கப்பட்ட தொழி
வாழ்வைத், தேடிக் கண்டு
, அதற்கு மதிப்பு ஊட்டிப்,
ளிகளை மகிழவைத்த மாவீரன்

ால் மார்க்ஸ்

நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளி நாடு

Best copy available.

அண்ணாவும் தொழிற்சங்கமும்

அறிஞர் அண்ணா அவர்கள் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் தொழிற்சங்க நடவடிக்கைகளில்தான் முதலில் ஈடுபட்டார். தொழிலாளர்களின் நிலை உயரவேண்டும், அவர்களிடையே ஒற்றுமை நிலவவேண்டும், தொழிற்சங்கம் வலுப்பெறவேண்டும் என்பதிலே தணியா ஆர்வங்கொண்டு 1934, 1935, 1936 ஆண்டுகளில் பாடுபட்டார்.

அறிஞர் அண்ணாவைத் தொழிற்சங்க நடவடிக்கைகளில் ஈடுபடுத்த முக்கிய காரணமாக இருந்தவர் காலஞ்சென்ற தோழர் பாசுதேவ் ஆவார்கள். அண்ணா அவர்களின் வீட்டார், அண்ணாவை ஏதேனும் ஒரு அரசாங்க வேலையில் அமர்த்தவேண்டும் என்பதிலே ஆர்வங்காட்ட, அண்ணாவோ அரசியல் நடவடிக்கைகளிலேயே ஆர்வங்காட்டிவந்தார். தோழர்கள் பாசுதேவ், ஆல்பர்ட் ஜேசுதாசன் ஆகியவர்களோடு சேர்ந்து தொழிற்சங்க பணிபுரிந்துவந்தார். தொழிற்சங்க நடவடிக்கைகள் மூலமாக, அந்த நாட்களில், காங்கிரசிலே இருந்த தோழர் என். வி. நடராசனுக்கும் அண்ணாவுக்கும் தொடர்பு உண்டு; ஆனால் அரசியலில் இருவரும் எதிர் எதிர் கட்சியினர்.

தோழர் ஜம்னாதாஸ் மேத்தா தலைமையில், லக்ஷ்மணபுரியில், நடைபெற்ற அகில இந்திய தொழிற்சங்க காங்கிரஸ் மாநாட்டிற்கு அண்ணா அவர்கள் தோழர் ஆல்பர்ட் ஜேசுதாசன் போன்றவர்களோடு, பிரதிநிதியாகச் சென்றிருந்தாராம். சென்னைத் தலைவர்கள், மாநாட்டில் அண்ணாவுக்கு உரிய இடம் அளிக்காமல், தங்கள் பின்னால் ஓடிவரக்கூடிய 'ஆட்டுக்குட்டி' போல நடத்தினார்களாம். மாநாட்டுத் தலைவர்களிடம் அண்ணாவை அறிமுகம் செய்துவைப்பதையும் அவர்கள் ஒருபொருட்டாகக் கருதவில்லையாம். மாநாட்டில் அண்ணா அவர்கள் ஒரு தீர்மானத்தின்மீது சிறிது நேரம் பேசவேண்டிய வாய்ப்பு கிடைத்ததாம். மாநாட்டினர் அண்ணா அவர்களின் பேச்சில் ஒன்றித், திளைத்து, மகிழ்ந்து, தணியாப் பற்றுக்கொண்டுவிட்டனராம். பிறகு மாநாடு முடியும் வரையில் தலைவர்கள் அண்ணாவைக் கண்டு பேச விரும்புவதும், தொண்டர்கள் அண்ணாவின் பின் ஓடுவதும் ஆன காட்சிகள், மற்ற சென்னைத் தலைவர்களை இருந்த இடம் தெரியாமல் மறக்கடித்துவிட்டனவாம். மாநாட்டின் விஷயாலோசனைக் குழுக் கூட்டத்தில் அண்ணா அவர்களின் கூற்றுக்கு நல்ல மதிப்பும், செல்வாக்கும் இருந்தனவாம். அந்த மாநாட்டில்தான் அண்ணா அவர்கள் அகில இந்திய தொழிற்சங்க காங்கிரசின் செயற்குழு உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

தொழிற்சங்க காங்கிரசில் ஈடுபட்டிருந்த அறிஞர் அண்ணா அவர்களை நேரடி அரசியல் கட்சியில் ஈடுபடும்படி செய்தவர், தோழர் 'சண்டே அப்சர்வர்' பி. பாலசுப்பிரமணியம் ஆவார்கள்.

மன்றம்

இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.

1 - 5 - 54 சனிக்கிழமை

மூன்றாவது ஆண்டு

"மன்றம்" இரண்டாண்டுகளைக் கழித்து, மூன்றாவது ஆண்டின் துவக்கத்தில் இருக்கிறது. பொருளாதார, அரசியல் நெருக்கடிகளையும், காலந்தரும் கஷ்ட நஷ்டங்களையும் கடந்து, "மன்றம்" தானெடுத்த கடமையாற்றும் நெறியிலே வந்திருக்கிறது. அந்தப் பாதையில் இரண்டாவது மைல்கல்லை இப்பொழுது கடக்கிறோம். நாமெடுத்துள்ள பயணத்தின் தூரத்தில், கால எல்லை காட்டும் கணக்கு அது. மூன்றாவதாண்டு! தொல்லை பல அடுத்தபோதிலும், வழியில் ஒரு குறிப்பிட்ட எல்லையைக் கடக்கும் பொழுது மட்டற்ற மகிழ்ச்சியும், பெருமிதமும் கொள்ளுகிறோம்

நாட்டிலே வெளிவரும் மற்ற பெரிய பத்திரிக்கைகளுடன் ஒப்பிடும்பொழுது—விலையால், வண்ணத்தால், அளவால், தனத்தால் பெரிய பத்திரிக்கைகள் அவைகள்—நமது கழகத்தாள்கள், சிறிதுகூட வசதிகளற்றவை அரசாங்க ஆதரவோ, ஆளும் கட்சியினரின் துணையோ, சீமான்கள் தரும் 'செக்குகளோ', ஆலையரசர்கள் தரும் விளம்பரங்களோ ஏதும் நமது கழகத் தாள்களுக்குக் கிடையாது. மாறாக, அரசாங்கம் தூவுகிற அடக்குமுறைச் சட்டங்களையும், கெடுபிடிகளையும் தாங்கிக்கொண்டு நமது பத்திரிக்கைகள் நடக்கவேண்டிய நிலையிலிருக்கின்றன. பசுமையும், செழுமையும் தவழும் பாதையில் அந்தப் பத்திரிக்கைகள் செல்லுகின்றன. நாம் தேர்ந்தெடுத்த பாதையோ கல்லும், முள்ளும் நிரம்பியது, உருண்டுவரும் பாறையும், இடறிவிடும் முட்டுகளும் கிடப்பது. பல விதத்தில் புதிய பாதையை அமைத்து நாம் செல்லவேண்டியிருக்கிறது. கஷ்டமான பாதை, நீண்ட தொலைவான பயணம்.

இரண்டுக்குமுள்ள வேறுபாடுகளுக்கு காரணமில்லாமலில்லை. அந்தப் பத்திரிக்கைகள் தேர்ந்தெடுத்த பாதை உல்லாச பயணத்துக்காக; நாம் செல்லுகிற பாதை ஒரு குறிக்கோளை அடைவதற்காக.

எந்தெந்தக் கொள்கைகளைத் தேர்ந்தெடுத்தால், எந்தெந்தச் செய்திகளை, கருத்துக்களை மிகைப்படுத்தினால் பத்திரிக்கை வளரும் என்று அவர்கள் தேர்ந்தெடுக்கின்றனர். பத்திரிக்கையின் கோட்பாட்டை, ஆருடப்பலனுக்கு ஒரு பக்கம், அறுபத்து மூவர் திருவிழாவைப்பற்றி ஒரு படம், கதா காலட்சேபங்களைப்பற்றிய அறிவிப்புகள், காமகோடி பீடாதிபதி விடும் ஆஸ்திக அறிக்கைக்கு ஒரு இடம் இப்படிப் பக்கங்களை நிரப்பிவிடுகின்றன.

பத்திரிக்கைகளை வளர்ப்பதற்காகச், சில கொள்கைகளை, முறைகளை அவர்கள் தேடிக் கொள்ளுகின்றனர். நாம் சில குறிப்பிட்ட கொள்கைகளை, கருத்துக்களை வளர்ப்பதற்காகப் பத்திரிக்கைகளை நடத்துகிறோம். எனவே அவர்களுக்கு மற்ற வகையில் கிடைக்கிற வசதிகள் நமக்கு இல்லாமற் போவதில் ஆச்சரியமில்லை. அதனால்தான் பொருளாதார நெருக்கடிகளும், அரசாங்கக் கண்டிப்புகளும் நமது பத்திரிக்கைகளைத் தாக்குகின்றன. நமது கழகப் பத்திரிக்கையை அரசாங்க வேலையில் இருப்பதற்காக தன் ஓய்வு நேரத்தில் படிப்பதாகத் தெரிந்தாலும் அது மாபெரும் குற்றமாகி விடுகிறது. அரசாங்கத்தைச் சார்ந்த அல்லது ஆதரவுபெற்ற இடங்களிலும் நமது பத்திரிக்கைகளுக்கு எதிர்ப்பிருக்கிறது. ஆனாலும், எதிர்ப்புக்கிடையில் நமது கழகத்தாள்கள் வளரத்தான் செய்கின்றன. அந்த வகையில், 'மன்றம்' இரண்டாவது ஆண்டை முடித்து, மூன்றாவது ஆண்டுக்கு வந்திருக்கிறது.

கடந்த போராட்டத்தில் திராவிட முன்னேற்றக்கழகம் மாபெரும் தாக்குதலுக்கு ஆளானது. மும்முனைப் போராட்டங்களில் கழகம் ஈடுபட்டு, ஆச்சாரியார் அள்ளி வீசிய அடக்குமுறைகளைத், தடியடிகளைத், தண்டனைகளைச், சிறைக்கூடங்களைத், துப்பாக்கிக்குண்டுகளைத் திராவிட முன்னேற்றக் கழகம் தாங்கிக்கொண்டது. அரசாங்கத்தின் தாக்குதல் நம்மை அழித்துவிடவில்லை. மாறாகப் போராட்டத்துக்குப் பின் முன்னைவிடப் புதுப்பலமும், உறுதியும் பெற்று வெளிவந்தோம். கழகத்தின் போராட்டங்கள்

வெற்றிபெற்றன. டால்மியாபுரம் 'கல்லக்குடி' யானது. ஆச்சாரியார் கொண்டுவந்த வர்ணாச்சிரமக் கல்வித்திட்டமும் கைவிடப்படும் நிலைக்கு வந்துவிட்டது. மேலும், நாம் விடுத்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாது, நல்லோர் பலர் சொன்ன அறிவுரைகளை ஏற்றுக்கொள்ளாது, "புதிய கல்வித்திட்டத்தைப் புகுத்தியே தீருவேன்" என்று ஆர்ப்பாட்டம் செய்தார் ஆச்சாரியார்; இன்று ஆர்ப்பாட்டம் அடங்கி, அதிகார வெறி குலைந்து, "மகான்" என்று வரவழைக்கப்பட்டவர், "மரியாதையுடன் போய் விடும்" என்று அவருடைய கட்சியினரால் வழியனுப்பப்படும் கட்டம்வரை நிலைமை வளர்ந்தது. "கழகத்தின் கணக்கைத் தீர்த்துக்கட்டுவேன்" என்று இறுமாப்புடன் கூறியவர், கடைசியில் தனது கணக்கைத் தீர்த்துக்கொண்டு பதவியை விட்டு வெளியேறும் நிலை பிறந்தது. திராவிட முன்னேற்றக் கழகத்தின் செல்வாக்கை அழித்துவிட, அதன் பலத்தை முறித்துவிட ஆச்சாரியார் திட்டமிட்டார். அதில் அவர் வெற்றி பெறவில்லை. கடந்த ஓராண்டு காலத்துக்குள் கழகம் உரனும், பெருமையும் பெற்று வளர்ந்திருக்கிறது, நாம் மனமகிழும் வகையில், மாற்றார் கண்டு மருளும் வகையில், மற்றோர் கண்டு வியக்கும் வகையில்.

அரசாங்கத்தின் தாக்குதல் சூழ்ந்த நேரத்தில், மற்ற கழக இதழ்களைப் போன்று, "மன்றமும்" தனது பணியைத் தொடர்ந்து செய்தது. ஆசிரியர் மூன்று மாதத் தண்டனை பெற்றுச் சிறைக்குள்ளிருந்தபொழுதும், அது தனது கடமையை ஒல்லும் வகையில் செய்தது.

மூன்றாவது ஆண்டின் துவக்கத்தில் இருக்கிறோம். நமது மகிழ்ச்சியையும், வணக்கத்தையும் நமது வாசகர்களுக்கும் ஆதரவாளருக்கும் அளிக்கிறோம்.

"மன்றம்" வாழவும், வளரவும் பெரிதும் துணைபுரிந்துவரும் நாணயமான விற்பனையாளர்க்கும், கட்டுரைகள், கதைகள், கவிதைகள், ஓவியங்கள் வரைந்து, "மன்றத்"திற்கு ஊக்கமூட்டும் கற்றறிவாளர், கலைஞர், கவிஞர், ஓவியர் ஆகியோர்க்கும், பொருளுதவி செய்து "மன்றத்"திற்கு வளமூட்டும் வள்ளல் தன்மை கொண்டோர்க்கும், அவ்வப்போது அறிவுரைகள் கூறி ஆக்கமளிக்கும் அறிஞர் அண்ணா அவர்களுக்கும் எமது நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்கிறோம்!

செப்புதல் கேட்பீர்!

மதத்தின் தலைவீர்!—இந்த
 மண்ணை வளைத்துள்ள அண்ணாத்தைமாரே!
குதர்க்கம் விளைத்தே—பெருங்
 கொள்ளை யடித்திட்ட கோடீசுரர்காள்!
வதக்கிப் பிழிந்தே—சொத்தை
 வடிகட்டி எம்மைத் துடிக்கவிட்டீரே!
நிதியின் பெருக்கம்—விளை
 நிலமுற்றும் உங்கள் வசம் பண்ணிவிட்டீர்!

செப்புதல் கேட்பீர்! இந்தச்
 சேகத் தொழிலாளர்கள் மிகப்பலர் ஆதலின்
சுப்பல்களாக—இனித்
 தொழும்பர்களாக மதித்திட வேண்டாம்!
இப்பொழுதே நீர்—போது
 இன்பம் விளைந்திட உங்களின் சொத்தை
ஒப்படைப்பீரே—எங்கள்
 உடலில் இரத்தம் கொதிப்பேற முன்பே
 (ஒப்படைப்பீரே!)

—புரட்சிக்கவிஞர் பாரதிதாசன்

ஏ. ஒய். அருளானந்தசாமி

தஞ்சைத் தரணியில் பெருங்கொடை வள்ளலாகத் திகழ்ந்த பெருந்தகையாளரும், அண்டினோர்க்கு ஆதரவு அளித்த அண்ணலும், தமிழ் மொழி வளர்ச்சியில் தணியா ஆர்வங்கொண்டவரும், பொதுப்பணிகளில் ஈடுபட்டு மக்களின் முன்னேற்றத்திற்குப் பாடுபட்ட மாண்புடையாளரும், மலர்ந்த முகமும் மறத்தமிழன் தோற்றமும் கொண்டவரும் ஆன தஞ்சை ஏ. ஒய். அருளானந்தசாமி அவர்கள் திடீரென்று இயற்கை எய்திவிட்ட செய்தி கேட்டுத் துயருற்றோம். அவரது இழப்பு தஞ்சைத் தரணியில் ஈடுசெய்யமுடியாத பேரிழப்பாகும். அவரது பெயரும், புகழும் நீடு விளங்கும் வகையில், அவரது வழிவரும் தலைமுறையினர் அவரது மாண்புகளின் நிலைக்களனாய் விளங்குவார்களாக! அன்னாரை இழந்து வருந்தும் அன்னாரின் குடும்பத்தினர்க்கும், உற்றார் உறவினர்க்கும், நண்பர்க்கும் எம் ஆழ்ந்த பரிவு உரித்தாகுக!

உழைப்போரின் வாழ்வு உயர !

தொழிலாளரின் உரிமைகளை நிலைநாட்டிட, கொண்டாடப்படும் நாள் மேதினமாகும். இன்று உலகெங்கும், அமெரிக்காவின் கலிபோர்னியாக் கடற்கரையிலிருந்து, கிழக்கே புதிய சீனாவின் பீக்கிங் தலைநகர் வரை, அலைமோதும் தென்கடலிலிருந்து, பனி மூடிய வட சைபீரியாமுனை வரை, உலகத் தொழிலாளரெல்லாம் இவ்விழாவைக் கொண்டாடுகின்றனர். உழைப்பின் மேன்மையை உரைத்திடும் விழா! உழைப்பாளரின் உரிமைவிழா! இந்த விழா நன்னாளன்று, நமது வாழ்த்துகளை உழைப்பவர் உலகிற்கு அளிக்கிறோம்!

நாட்டின் உற்பத்தி முறையிலும், உற்பத்தியான பொருள்களை வினியோகிக்கும் முறையிலும் ஏற்பட்ட ஏகபோக உரிமைகளால், தனிப்பட்டவர்கள் உயர்ந்துவிடவும், மிகப்பலர் தாழ்ந்துவிடவுமான நிலை ஏற்பட்டது. பாடுபடாத முதலாளிகள் மிகச்சிலர், பாடுபடும் தொழிலாளர் பலகோடி மக்கள். ஆனால் கோடிக்கணக்கானவர்கள் உழைத்துக் குவிக்கிற பலன், பாடுபடாத ஒரு சிலரை மட்டும் கோடீஸ்வரர்களாக்கவே பயன்பட்டது. தொழிலாளர் பாடுபட்டனர், பலன் கிடைக்கவில்லை.

ஏற்றச்சாலிட்டு, இடுப்பொடிய, முதுகு வலிக்க, கந்தன் பாதாளத்துக் கிணற்றிலிருந்து தண்ணீரை மேலே கொண்டுவருகிறான், கிணற்று மேடைமீது ஏற்றச்சால் சாய்கிறது, பெருக்கெடுத்துத் தண்ணீர் வழிந்தோடுகிறது. அவனுடைய தோட்டத்துக்கு எவ்வளவு தேவையோ, அதைவிட அதிகமான அளவுதான் தண்ணீரை வெளியே எடுத்துக் கொட்டுகிறான் கந்தன். அவனது உழைப்பைக் கண்டு வியக்காதார் கிடையாது. அவனுடைய தோட்டத்தில் நல்ல பலன் கிடைக்குமென்று எல்லோரும் கூறுகின்றனர். கந்தனும் அந்த எண்ணத்தில்தான் உழைக்கிறான்.

ஆனால் அவன் எதிர்பார்த்ததில் பத்தில் ஒரு பங்குகூடப் பலன் கிடைக்கவில்லை. கந்தன் மிகக் கஷ்டப்பட்டுத், தண்ணீருடன் வியர்வையைக் கொட்டி, வாய்க்காலில் நீர் பாய்ச்சினான், அதுவும் தேவையான அளவுக்குமேல். ஆனால் பாத்தியிலிருந்த இளஞ்செடிகள் வாடிக்கிடந்தன, மூலையிலிருந்த கொடி காய்ந்துவிட்டது, வாழை மரங்கள் பலன்தரும் நேரத்தில் சாய்ந்துவிட்டன, தோட்டத்தில் இருந்த மாமரங்களும் பட்டுப்போக ஆரம்பித்தன. கந்தனின் உள்ளத்தில் ஏக்கமும், வேதனையும், கப்பின. எந்த இடத்தில் குறையென்று அவனால் கண்டுபிடிக்க முடியவில்லை.

ஆனால் அவனது தோட்டத்துக்குப் பக்கத்திலிருந்த காத்தானுடைய தோட்டத்திலோ, பாத்திகள் பசுமையாக இருந்தன, செடிகொடிகள் தழைத்தன, வாழைகுலை தள்ளியிருந்தது, மாமரத்தில் கனிகள் குலுங்கின. இவ்வளவுக்கும் கந்தனைப்போலக் காத்தான் பாடுபடக்கூடியவனல்ல. அவன் ஏற்றம் பிடித்து இறைத்ததை யாரும் பார்த்திருக்க முடியாது. ஆனால் அவனுடைய தோட்டம், பாடுபட்டும் பலன் காணாத கந்தனின் தோட்டத்தைப் பார்த்து ஏளனம் செய்வதுபோலிருந்தது. உண்மையிலேயே வேடிக்கையான காட்சிதானே!

இங்கே கந்தன் உழைத்தான், உடம்பு அலுத்துப்போகும்வரை; அவன் தோட்டம் உலர்ந்து போயிருக்கிறது. பக்கத்தில் காத்தான் சோம்பேறியாகக் காலங்கடத்தினான்; அவன் தோட்டத்தில் வளமை கொழிக்கிறது.

ஊரில் சிலர் இந்த வேறுபாட்டுக்கு—அதிசயத்துக்குப் பல காரணங்கள் சொன்னார்கள்.

"காத்தான் தோட்டத்தில் மண் வளமானது, அதனால்தான் பயிர் செழிப்பாக இருக்கிறது." கந்தனால் இந்தக் காரணத்தை ஒப்புக்கொள்ள முடியவில்லை. பக்கத்து நிலங்கள்; ஓரடி எடுத்துவைத்தால் ஒரு தோட்டத்திலிருந்து மற்றொரு தோட்டத்திற்குச் சென்றுவிடலாம். ஆகவே இரண்டு தோட்டங்களுக்குள்ளும் மண்வளத்துக்குள் வேறுபாடு அதிகமாகிவிடமுடியாது!

"காத்தானுக்குக் காளியின் அருள் இருக்கிறது, அதனால்தான் அவன் தோட்டத்தில் பயிர்

செழிப்பாக வளர்கிறது" இந்தக் காரணத்தையும் கந்தனைப் பொறுத்தவரையில் ஏற்றுக் கொள்ளமுடியாது. ஏனென்றால் அந்த ஊரில், கந்தனைப்போன்ற பக்திமான் இருந்திருக்க முடியாது. காத்தான் வாரத்துக்கு ஒருமுறை காளி கோவிலுக்குப் போனால், கந்தன் ஒவ்வொரு நாளும் காலை, மாலை இரண்டுவேளையும் போய்வந்தான். காளி அருள்பாலிப்பதென்றால் அது கந்தனுக்குத்தான் அதிகமாகக் கிடைக்க வேண்டும், காத்தானுக்குக் கிடைக்கக்கூடியதைவிட. மற்றவர்கள் கூறிய காரணங்கள்கூட எதுவும் பொருந்திவரவில்லை. உழைப்பிலோ, கண்காணிப்பிலோ, திறமையிலோ, செயலிலோ, எந்தவகையிலும் கந்தன் மேம்பட்டவன். ஆனால் அவன் தோட்டம் வரண்டுகிடந்தது.

கஷ்டப்பட்டும் பயிர் காணாத கந்தன் தோட்டத்தையும், கஷ்டப்படாமலே பயிர் செழிக்கும் காத்தான் தோட்டத்தையும் பார்த்த சிலர், கடைசியாக உண்மைக்காரணமெதுவெனக் கண்டுபிடிக்க முன்வந்தனர். கந்தன் ஏற்றம் பிடித்து இறைப்பதைப் பார்த்தனர், கொட்டுகிற தண்ணீர் குறைவில்லாமலிருந்தது. சரியென்று அங்கிருந்து பாத்தியருகே சென்றனர். இறைக்கப்பட்ட தண்ணீரில் சிறிதளவே அங்கு வந்ததைக் கண்டனர். அது அவர்களுக்கு ஆச்சரியத்தைத் தந்தது. கொட்டப்பட்ட தண்ணீரோ ஏராளம், ஆனால் கடைசியில் சேர்ந்திருப்பதோ பத்தில் ஒரு பங்குக்கும் குறைவானது. எப்படி மாயமாக மறைந்தது என்பதை ஆராய்ந்தனர், தண்ணீர் செல்லும் பாதையைப்பார்த்தனர். கடைசியாகக் கண்டுபிடித்தனர், தண்ணீர்ப்போகும் வாய்க்காலில் ஒரு மறைவான வழி அமைக்கப்பட்டுத், தண்ணீரெல்லாம் பக்கத்துக் காத்தான் தோட்டத்துக்குப் போய்விடுவதை!

இவ்வளவு நாளும் கந்தன் இறைத்த தண்ணீரெல்லாம் அவனுடைய தோட்டத்தை வளமாக்கவில்லை. பக்கத்திலிருக்கும் சோம்பேறிக் காத்தான் தோட்டத்தை வளமாக்கிக்கொண்டிருந்தது. கந்தன் தோட்டம் பாழானதற்கும், காத்தான் தோட்டம் செழித்ததற்கும் காளியின் கடாட்சமோ, காத்தானின் கைராசியோ, எதுவும் காரணமில்லை. கந்தன் தண்ணீர் இறைக்குமிடத்துக்கும், அது பாயவேண்டிய இடத்துக்கும் மத்தியில் அமைக்கப்பட்ட கள்ள வழிதான் காரணம்.

எலிகள் புசிக்க எலாம் கொடுத்தே சிங்க
ஏறுகள் ஏங்கிடுமோ ?—இனிப்
புலிகள் நரிக்குப் புசிப்பளித்தே பெரும்
புதரினில் தூங்கிடுமோ ?

—பாரதிதாசன்.

இதைப்போலவே, இன்றையப் பொருளாதார அமைப்பிலும் கள்ள வழிகள் பல செய்யப்பட்டிருக்கின்றன. கந்தனைப்போல, தொழிலாளர்கள் பாடுபட்டு உழைக்கின்றனர்; அவர்கள் அனுப்பும் வியர்வை வெள்ளம் அவர்களது வாழ்வுத் தோட்டத்தை வளமாக்கவில்லை; பக்கத்துக் காத்தான் போன்ற எத்தர்களின் வாழ்க்கையை வளம்செய்துவிடுகிறது.

தொழிலாளர் தமது உழைப்பின் பலனைப் பெறமுடியவில்லை; அந்தப் பலனில் பெரும் பகுதி உழைக்காது வாழும் ஒருசிலரிடம் சென்றுவிடுகிறது.

பொருளாதாரத் துறையில், ஒருவர் உழைப்பை மற்றொருவருக்கு மாற்றிவிடும் கள்ள வழிகள் அனைத்தையும் அடைத்து உழைப்பின் பலன் முழுதும் உழைப்பாளர்க்கே ஆக்கச்செய்வதுதான் சமதர்மத்தின் அடிப்படை நோக்கமாகும்.

உழைப்போரின் வாழ்வு வரண்ட பாலையாகிறது, உழைக்காது இருக்கும் ஒருசிலரின் வாழ்க்கை பூங்காவனமாக இருக்கிறது. இந்த நிலை மாறி, உழைப்போரின் வாழ்வை வளமுடையதாக்க உறுதி பூணுவதே மேதினமாகும்.

சமுதாயத்தில் உள்ள ஏற்றத்தாழ்வுகள், ஒருவர் உழைப்பை மற்றவர் சுரண்டிவாழும் முறை, உழைப்புக்கும் அது பலன்காணும் இடத்துக்கும் மத்தியில் இருக்கும் கள்ள வழிகள், இப்பொழுது இருக்கும் ஊழல் முறையை, மோசடி வித்தையை மறைக்கக் கூறப்படும் மாயாவாதங்கள் இவைகள் அழிக்கப்பட்டுத், தொழிலுக்கு மதிப்புந்தந்து, சக்திக்கேற்ற உழைப்பையும் தேவைக்கேற்ற வசதியையும் தருகிறது சமதர்மம். புதிய சமுதாயத்தை—புதியதோர் உலகை—அந்தப் பொன்னான காலத்தை உண்டாக்குவதற்கு, இந்த மேதினம், நமக்கும், நமது தொழிலாளர் தோழர்களுக்கும் உறுதி அளிப்பதாகுக!

மே தினம் பூத்தது!

வளமையினருகே வறுமை, பலத்தினருகே பயம் இது ஏன்?" இந்தக் கேள்வி சாதாரண மக்களையல்ல, கருத்துலகின் காவலர்களாக விளங்கியவர்களனைவரையும் கதிகலங்க அடித்தது. கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாழ்ந்த பிளேட்டோ என்னும் கிரேக்க தத்துவ ஞானியின் காலத்திலிருந்து கி. பி. பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆரம்பித்த மார்க்ஸ் காலத்தின் முன் வரை, 'மக்களின் நல்வாழ்வுக்கான' ஆராய்ச்சிகளனைத்தும் நம்பிக்கையான முடிவை அளிக்கவில்லை. பெரும்பகுதி வெறும் சொல்லாராய்ச்சியாகவும், வேதாந்த விசாரணையாகவும், சமாதானத்தை அளிக்காத சமரச கீதமாகவும், நாட்டுக்குதவாத ஏட்டுரையாகவும் முடிந்தது.

இருட்டறையில் இன்னலுற்ற மக்கள் இன்பங்காண விழைந்த ஒவ்வொரு சமயமும் ஒடுக்கப்பட்டனர். ஆண்டை—அடிமை, உயர்ந்தவன்—தாழ்ந்தவன், மதக்குரு—பக்தன், மிராசு—உழவன், பிரபு—பணியாள், முதலாளி—தொழிலாளி இவர்களிடையே ஏற்பட்ட வர்க்கப் போராட்டங்களே, உலக வரலாறாகும். கலையுலகிலும் கருத்துலகிலும் மற்ற நாடுகளுக்குக் கருவூலமாக விளங்கிய கிரேக்க நாடு இவ்விதமான போராட்டத்திலேயே உருக்குலைந்தது. ரோம் தனியரசு வீழ்ந்ததற்குக் காரணம், இத்தாலி நாட்டில் ஏற்பட்ட உயர்ந்தவன்—தாழ்ந்தவன் என்ற பிறப்புப்பேதம். இத்தகைய போராட்டங்கள் ஒன்றிரண்டல்ல, நூற்றுக்கணக்கில் நடந்துள்ளன. தோற்றவர்கள் உள்ளம் உடைந்தனர், பின்வாங்கினர். போராட்டத்தின் இறுதியில் புரட்சிப் புயல் வீசியது அல்லது புகையின் வெம்மையிலே இருவர்க்கத்திலும் பெரும்பகுதி அழிந்தது. புயல் ஓய்ந்தபோதிலும், புயலினால் வீழ்த்தப்பட்ட பழைமை மரங்கள் மீண்டும் மண்ணில் நிலைநிறுத்தப்படவில்லை.

இந்தப் போராட்டங்களின் வரலாற்றை நன்றாக அலசிப்பார்த்தவர் மார்க்ஸ். பிரபுக்கள்—முதலாளிகளின் கொடுங்கோன்மைகள் வெகுநாளைக்கு நிலைக்காதென்பதையும், உழைப்பாளிகளின் முயற்சியால்தான் உழைப்பாளர் உலகு மலரும் என்பதையும் அவர் எடுத்துக்காட்டினார். அவருடைய தெளிந்த முடிவு ஒடுக்கப்பட்ட உழைப்பாளர்களை ஒன்றுசேர்த்தது; நலிவுற்ற உளத்தைப் புலியுளமாக்கியது. கசங்கிய கண்கள் கனலைக் கக்கின. மேதினி விழித்தது, மே தினம் பூத்தது! முதல் மேதினம் 1889-ல் பாரிசில் கூடிய உலக சமதர்மக் குழுவினரால், தொழிலாளரின் நன்னாளாகத் தீர்மானிக்கப்பட்டது. ஒவ்வொரு மே தினத்திலும், அவ்விழாவைக் கொண்டாடக் கூடியிருக்கும் தொழிலாளர் தொகை தேய்வதாகக் காணோம். எங்கு உரிமை சூறையாடப்படுகிறதோ, உழைப்பு கொள்ளையடிக்கப்படுகிறதோ, உணர்வு சிதைக்கப்படுகிறதோ, உயர்நிலை வீழ்த்தப்படுகிறதோ, அங்கெல்லாம் மே தினம் போராட்டங்களின் ஆரம்பநாளாகவே கருதப்படுகிறது. சமூக, அரசியல், பொருளாதாரத் துறைகளில் ஒடுக்கப்பட்டு, இலையுதிர்ந்த மரமாக நிற்கும் தேய்ந்த திராவிடத்தில் மே தினம் கொடுமைகளைக் களைய நாம் எடுக்கும் கொடுவாளாகக் காட்சியளிக்கிறது.

மேதினி எங்கும் கொண்டாடப்படும் மேதின விழாவன்று திராவிட முன்னேற்றக் கழகம் கொள்ளும் உறுதி இதுவே: சுரண்டல் முறை ஒழிக்கப்படவேண்டும், எங்கெங்கு காணப்படினும், என்னென்ன உருவில் இருப்பினும்.

—அறிஞர் அண்ணா.

கருத்துக் கதிர்

பண்பு மறந்த பண்டிதர்

இந்தியாவின் பிரதமர் நேருப் பண்டிதர், வழக்கம்போல், இவ்வாண்டும் தென்னாட்டிற்குப் 'பவனி' வந்தார்; வழக்கம்போல் ஆணவ—ஆதிக்க—அதிகார 'தர்பார்' நடத்தினார்; வழக்கம்போல் திராவிட இயக்கத்தாரின்மீது, காரணகாரிய விளக்கங் காட்டாமல், கருத்தற்ற 'வசைமாரி'யினைப் பொழிந்துவிட்டுச் சென்றார்!

பண்டித நேருவினிடத்தில் நமக்கெல்லாம் மதிப்பு இருந்தது, ஒரு காலத்தில்! ஆம் முன் ஒருகாலத்தில், இருந்தது! அவர் அரசியல் நேர்மையாளராக, அரசியல் கண்ணியம் வாய்ந்தவராக, அரசியல் நாகரிகம் புரிந்தவராக, அரசியல் நெறிமுறை அறிந்தவராக இருப்பார் என்று கருதினோம். நாம் அப்படிக் கருதியதற்குக் காரணம், அவர் அகில உலகம் சுற்றியவர், அமெரிக்க அரசியலறிஞரோடு நட்புறவு கொண்டவர், பொதுவுடைமைக் கருத்துக்களைப் போற்றியவர், உலக அரசியல் நேர்மையாளரோடு பழகியவர், கேம்பிரிட்ஜ பல்கலைக் கழகத்தில் பயின்றவர் என்று கேள்விப்பட்டதேயாகும். பண்டித நேரு, எதிர்க்கட்சியினரை மதிக்கும் 'மாண்பை'யும், எதிர்க்கட்சியினரின் கருத்துக்களை ஆய்ந்து காணும் 'பொறுமை'யையும் எந்த அளவுக்குக் கொண்டிருக்கிறார் என்று பார்க்கும்போது, அவரது சிலபல பேச்சுக்கள், அவரை மிகமிக இழிந்த நிலைக்கு—மட்டரக நிலைக்கு அழைத்துச் சென்றிருக்கின்றன என்றுதான் அறிந்துகொள்ளவேண்டியிருக்கிறது. எதிர்க்கட்சியினரையும், எதிர்க்கட்சியின் கருத்துக்களையும் காரண காரியங் காட்டாமல், மிகமிக இழிந்த முறையில், 'கன்னாபின்னா' என்று, வசைமாரி பொழிய நேரு முனைந்துவிடுகிறார் என்றால், மற்ற உலக அரசியல் தலைவர்களிடத்திலிருந்து, தம்மை எவ்வளவு தாழ்நத நிலைக்கு அழைத்துக் கொண்டு செல்ல அவர் விரும்புகிறார் என்பதை அறியலாம். மிகப் பிற்போக்குக் கொள்கை கொண்ட சர்ச்சில், மலான், சியாங்கே ஷேக் போன்றவர்கள் கூட, நேரு எதிர்க்கட்சியினர் மீது வீசும் சுடுசொற்களைத், தம் நாவால் உச்சரிக்கக் கூசுவார்கள் என்றே கருதுகிறோம். அரசியல் நாகரிகத்தையும், கண்ணியத்தையும் மறந்து, 'சுதந்திர ஜனநாயகக் குடியரசி'ன் பிரதமர் பதவியில் வீற்றிருந்து, நேரு, பிறக் கட்சியினரைத் 'திட்டு'வதைப் போல, உலகில் வேறு எந்த நாட்டு அரசியல் தலைவனும் இழிச் சொல் கூறுவானா என்பது ஐயப்பாடே!

திராவிட இயக்கத்தார் நாட்டுப் பிரிவினைக்கான காரணங்களையும், விளக்கங்களையும், வரலாற்றுச் சான்றுகளையும், தேவையின் இன்றியமையாமையையும் நாகரிகமான முறையில் தான் எடுத்து வைத்துவருகிறார்கள். அறிஞர் அண்ணாவின் பேச்சையும், எழுத்தையும் காணுவோர் இதனை நன்கு உணரலாம். பண்டித நேருவுக்குப் பிரிவினைக் கொள்கைகளும், திராவிட இயக்கத்தார் மேற்கொள்ளும் போராட்டத் திட்டங்களும் தவறானவை யென்று பட்டால், அவர் காரணங்காட்டிக் கருத்துக்களைக் கண்டித்திருக்கலாம்; திட்டங்களைத் தாக்கியிருக்கலாம்! அவரது 'இயல்பு' அந்த உயர் நிலைக்கு இடங்கொடுக்காவிட்டாலும், அவர் வகித்திருக்கும் 'பதவி'யைப் பொறுத்தாவது, தமது 'இயல்பை' அடக்கிக்கொண்டு, பெருந்தன்மையைச் சிறிது முயற்சி எடுத்துக் காட்டியிருக்கலாம்! அதனை விடுத்துத், தமிழக அரசியலில் மிக மட்டமான தளத்தில் உலாவும் சந்து முனையில் நின்றதுகள், சிந்துபாடித் திரிந்ததுகள், ஏனோதானோக்கள், எங்கேயோ கிடந்ததுகள், சின்னதுகள், பெரியதுகள், பண்டாரங்கள், பரதேசிகள் போல நேருவும் இறங்கிவந்து விடும் காட்சிகளை அடிக்கடி பார்க்கும்போது நமக்கு இரக்கவுணர்ச்சி ஏற்படுகிறது!

திராவிட இயக்கத்தாரைச் 'சிறுபிள்ளைத்தனமான முட்டாள்தனம்' கொண்டவர்கள் என்றார், பின்னர் 'பரிகசிக்கத்தக்கதான முட்டாள் தனம்' படைத்தவர்கள் என்றார், பின்னர் 'காட்டுமிராண்டிகள்' என்றும், 'காட்டுமிராண்டிகளைக் காட்டிலும் கேடுகெட்டவர்கள்' என்றும் கூறினார், இப்பொழுது சிதம்பரத்தில் கூறுகிறார், 'திராவிட இயக்கத்தார் இன்னும் ஏன் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு அனுப்பப் படவில்லை' என்று! பண்டித நேருவையும், தமிழகக் காங்கிரஸ் அரசியல் மேடையில் காணப் படும் ஒரு விபூதி பூசும் 'பரதேசி'யையும் ஒப்பிட்டு நோக்கினால், இருவர்க்கும் பண்பிலே

வேற்றுமை இருப்பதாகத் தெரியவில்லை ; கல்வி கேள்விகளில், பட்டம் பதவியில், ஆதிக்க அதிகாரத்தில் மட்டுமே வேற்றுமை காணப்படுகிறது!

திராவிட இயக்கத்தார் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் இல்லாமல், ஏன் வெளியே இருக்கிறார்கள் என்னும் கருத்துப்பட நேரு கேட்கிறார்! நேருப் பண்டிதர் அவர்களே! திராவிட இயக்கத்தார் பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போகத்தான் போகிறார்கள்! வெளியே இருக்கும் வேலைகளை முடித்துக்கொண்டு, பிறகு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குச் செல்லலாமென்றிருக்கிறார்கள்! பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்குப் போவார்கள்! உறுதியாகப் போவார்கள்! எப்படி? டாக்டர்களாக, நேருவே, டாக்டர்களாக! ஏன் வெளியே இருக்கிறார்கள் என்றால், வெளியில் மதத்தலைவர்களாலும், காங்கிரஸ் தலைவர்களாலும் உற்பத்தியாக்கப் பட்டிருக்கும் 'பைத்தி'யங்களைத் தெளிய வைத்துவிட்டுப், பிறகு ஆஸ்பத்திரிப் பைத்தியங்களைத் தெளியவைக்கலாமென்றிருக்கிறார்கள்! நேருவே, ஏன் அவசரப்படுகிறீர்? பொறும், நேருவே, பொறும்! வெளியே வைதிகம், வர்ணாச்சிரமம், சனாதனம், கடவுட்பக்தி, மதவெறி, புராணங்கள், இதிகாசங்கள் ஆகியவைகள் பிடித்தாட்டும் பைத்தியங்களையும், பிற பைத்தியங்களையும் தெளிவுபெற வைக்க வேண்டிய பெரும் பொறுப்பு, திராவிடரியக்க 'டாக்டர்களைச்' சேர்ந்ததாக இருக்கிறது.

பொறுப்பு பெரிது; சக்தி குறைவு! எனவே தான் சிறுகச்சிறுக செய்யவேண்டி ஏற்படுகிறது! நேருவே அவசரப்படவேண்டாம், நாட்டைத் திருத்துவதோடு நில்லாமல், விரைவில் ஆஸ்பத்திரியையும் திருத்தச் செல்வார்கள்!

தம் நிலை மறந்த பண்டித நேருவுக்கு நமது இரக்கமும், பரிவும் உரியவாக!

ஃ ஃ ஃ

துரோகத்திற்குப் பரிசா?

ஜனநாயகத்தின் தன்மைபடி, மக்களின் கருத்துக்களைப் பிரதிபலிப்பவர்களே, பிரதிநிதிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுவர். சென்ற பொதுத் தேர்தலில் காங்கிரஸின் கொள்கை—திட்டத்திற்கேற்ப கடலூர்த்தொகுதியில் தன்னைப் பிரதிநிதியாக்கிக்கொண்டவர் தோழர் சீனுவாசன் (படையாச்சி); காங்கிரஸுக்கு எதிராக நின்று போராடும் கொள்கை—திட்டத்திற்குத் தன்னைப் பிரதிநிதியாக்கிக்கொண்டவர் தோழர் இராமசாமி (ப்படையாச்சி); போட்டியிட்ட இருவரில் தோழர் இராமசாமி(ப் படையாச்சி) சுமார் 20,000 வாக்குகள் மிகவாகப் பெற்று வெற்றிபெற்றார். வெற்றிபெற்றார் என்றால், தங்கள் வாக்குகள் எக்காரணங்கொண்டும் காங்கிரஸுக்கு எதிராகக் கோழிப் பெட்டிக்கே போகவேண்டும் என்று கருதி பெருவாரியினர் வாக்குகள் போட்டனர் என்று பொருள். தோழர் சீனிவாசன் (படையாச்சி) வெற்றி பெற்றிருந்தால் எந்தக் காங்கிரஸ் அமைச்சர் குழுவுக்கு எப்படி ஆதரவு தந்திருப்பாரோ, அதே செயலைத்தான் இப்பொழுது இராமசாமி (ப்படையாச்சி) செய்திருக்கிறார் என்றால், நாணயமற்ற இராமசாமியாரை விட நாணயமான சீனுவாசனார் எவ்வளவோ சிறந்தவராயிற்றே!

தோழர் எஸ். எஸ். இராமசாமி கருத்து மாறுபாடு கொள்வது தவறல்ல; காங்கிரஸை எதிர்த்துப் போராடுவதாக வாக்களித்துவிட்டுச் சென்ற அவருக்குக், காங்கிரஸை ஆதரிக்க வேண்டும் என்ற எண்ணம் தோன்றுகிறதென்றால் என்ன செய்திருக்கவேண்டும்? தோழர் இராமசாமி நாணயமும், நேர்மையும், கண்ணியமும் உடையவரானால், மீண்டும் தம் தொகுதி மக்களிடையே சென்று, தம் கருத்து மாறுபாட்டை விளக்கிக், காங்கிரஸுக்கு எதிராகப் பெற்ற எம். எல். ஏ. பிரதிநிதித்துவத்தை ராஜினாமா செய்துவிட்டுப், பிறகு காங்கிரஸுக்குச் சார்பாக நின்று, மக்கள் நம்பிக்கையைப் பெற்றுத், தேர்தலில் வெற்றிபெற்றுக், காங்கிரஸ் எம்.எல். ஏ. வாக ஆகி, மந்திரிப்பதவி ஏற்றிருப்பாரேயானால், அவரை அரசியல் நாணயம் படைத்தவர் என்று ஏற்றுக்கொள்ளலாம். பொதுமக்களிடம் காங்கிரஸுக்கு எதிராகக் கிடைத்த 'பதவிச்செல்வாக்கை' ஒருவர், காங்கிரஸிடம் 'அடகு' வைத்துவிட்டு, அந்தத் துரோகச் செயலின் பரிசாக 'மந்திரிப்பதவி'யைப் பெற்றுக்கொள்கிறார்; அந்தத் துரோகச் செயலுக்கு அனுமதி தந்து, ஆதரவளிக்கிறது நேருவின் காங்கிரஸ் என்றால், அந்த வெட்கக் கேடான செயலுக்கு எங்கே பரிகாரம்? ஜனநாயகத்திற்கு எதிர்காலத்தில் எங்கே பாதுகாப்பு? துரோகத்திற்குப் பரிசாக—மந்திரிப் பதவி கொடுக்கப்படுகிறது! ஜனநாயகமே, நீ என்று தூய்மையாக்கப்படுவாயோ!

அட்டைப்பட விளக்கம் :

காரல் மார்க்ஸ்

வறுமை எனும் செல்லாலரிக்கப்பட்டுப், பழமை என்னும் புழுதியால் படியப்பட்டுக், கொடுமைஎனும் குண்டுகளால் துளைக்கப்பட்டுச் சாய்ந்த தராசில் அற்பத்தொகைக்கு விற்கப் பட்ட தொழிலாளர் வாழ்வைத் தேடிக் கண்டு பிடித்தவர் காரல் மார்க்ஸ்.

“தளராது உழைக்குந் தன்மையைப் பெற்ற வனே பேரறிஞன்”—இந்த வாசகம் மார்க்ஸ் வரலாற்றுக்கு எடுத்துக்காட்டாக இருக்கிறது. அவரைப்போல் சலியாது உழைத்தவர்கள் வேறு எவரும் இருந்திருக்கமுடியாது. மாலை நேரத்தில் தன் நண்பர்களைச் சந்தித்த பிறகும், கூட்டங்கள் முடிந்த பிறகும், மார்க்ஸ் தன் அறையில் உட்கார்ந்து தன் வேலையில் ஈடுபட்டு விடுவார். இரவில் நெடுநேரம் வரை படிப்பது, குறிப்புகள் எடுப்பது, எழுதுவது என்று ஓய் வின்றி இருப்பார். இரவில் இரண்டுமூன்று மணிக்குமேல் உறங்கப்போவார். அவரைப் போல் தொடர்ந்து, சிறிதுகூட அலுக்காமல் ஆராய்ந்தவர்கள் மிகச் சிலரே இருந்திருப் பார்கள்.

சிறந்த ஆராய்ச்சிக்கும், அவரது கடினமான உழைப்புக்கும் எடுத்துக்காட்டாக விளங்குவது அவர் எழுதிய “கேப்பிட்டல்” (மூலதனம்) என்ற புத்தகமாகும். அதில் எழுதப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியமும், சிறு முடிவுகூட ஆதாரமின்றி ஆராய்ச்சியின்றி எழுதப்பட்ட தல்ல. “மூலதனம்” என்ற புத்தகத்தை எழுதி முடிக்க நீண்டகாலம் உழைத்தார். கொஞ்சநஞ்சமல்ல, நாற்பதாண்டுகள்! நாற்ப தாண்டு உழைப்பில் “மூலதனம்” உருப்பெற் றது. அவருடைய ஆராய்ச்சித் திறமையின் அழியாச் சின்னம், வரலாறு—பொருளாதாரம் என்பவைகளில் முதலாவதாக எடுத்துக் கொள்ளப்பட்ட விஞ்ஞான ஆராய்ச்சியின் ஆரம்பம், தொழிலாளியின் நலனுக்கும், நம்பிக் கைக்கும் மூலதனமாக விளங்குவது மூலதன மேயாகும்.

உலகப் பேரறிஞர்; மிகச் சிறந்த ஆராய்ச்சி நூல் எழுதி முடித்தார்; நாற்பதாண்டுகள் உழைத்தார்; எனினும் பெரும் ஆராய்ச்சி செல்வத்தை அளித்தபோதிலும் வசதிகளற்ற வாழ்விலேயே அவர் உழன்றார். வறுமையில் வாடினார். பத்திரிகைகளுக்கு எழுதி அவர் பெற்ற ஊதியமும், அவரது இனிய நண்பர் ஏங்கெல்ஸ் அளித்த பதவியுமே அவரைப் பாதுகாத்தன.

சலியாத உழைப்பு, கடுமையான ஆராய்ச்சி, அசைந்துகொடுக்காத கொள்கை, தோல்வி யைக் கண்டு தயங்காத முயற்சி இவைகளே மார்க்ஸ் ஆராய்ச்சிகளைப் படிக்கும்பொழுது அவரைப்பற்றி நமக்குத் தெரிவன. புன்னகை தவழும் முகம், கண்களில் நீர் பெருகச் சிரித் துப் பேசும் இயல்பு, கனிந்த இரக்க மனப் பான்மை, எவரிடமும் அன்பு பாராட்டும் இத யம் இவைகளும் மார்க்ஸிடம் இருந்தன.

குடும்பத்திலும், நண்பர்களிடையும் மார்க்ஸ் வாழ்வு இன்பமாகக் கழிந்திருக்கும், வேறு தொல்லைகள் குறுக்கிடாதிருந்தால். வசதிக் குறைவால் அல்லற்பட்ட வாழ்வும், ஐரோப்பிய நாடுகளில் எங்கும் தங்கமுடியாது ஒரு நாட்டி லிருந்து மற்றொரு நாட்டிற்கு அலைந்தோடிய நாடோடி வாழ்வும் துன்பத்தையே கொடுத் தன. அவரது கட்டுரைகளுக்கும் ஆராய்ச்சி களுக்கும், கண்டனங்கள் வந்துகொண்டிருந் தன. ‘மூலதனம்’ என்ற நூல் வெளிவந்ததுந் தான் அவர் பெயர் அசைக்கமுடியாததாகியது. அவர் எண்ணப்படி, உலகத் தொழிலாளர் அமைப்பு உண்டாகி, மார்க்ஸ் கொள்கைகள் அதில் ஒப்புக்கொள்ளப்பட்டன. தொழிலாளர் கூட்டுறவும், சமதர்ம நோக்கமும் பரவின. 1871-ல் பாரிசில் புரட்சி ஏற்பட்டு முதல் முறையாகத் தொழிலாளர் ஆட்சியைக் கைப் பற்றினர்.

1883 மார்ச்சு 14-ல் அவருடைய 65-வது வயதில் இறந்தார். அவர் வாழ்ந்ததைப் போலவே அவருடைய முடிவும் இருந்தது. புத்தகங்களும், குறிப்புகளும், மிகுந்திருக்கும் மேஜைக்கு எதிரில், அவர் எழுதும்போது உட்காரும் நாற்காலியில் அமர்ந்து, களைப்பி னால் உறங்கும்பொழுது அப்படியே இறந்து விட்டார். ஹைகேட் என்ற இடத்தில் ஆடம் பரமற்ற முறையில் மார்க்ஸ் குடும்பத்தினரின் புதைகுழி இருக்கிறது.

வளரும் கொள்கை

[ப. வாணன்]

"உலகத் தொழிலாளர்களே, ஒன்று படுங்கள்!" என்று மார்க்ஸ் கூறி இன்றோடு 106 ஆண்டுகள் ஓடிவிட்டன! ஆனால் தொழிலாளர்களை ஒன்று படுத்தும் முயற்சி இன்னும் நடந்த வண்ணம்தானிருக்கிறது.

சென்ற நூற்றாண்டிலே மார்க்சின் தத்துவம் ஏட்டளவிலே நின்றது. மன்றங்களில் விவாதிக்கப்பட்டது. ஆனால் இன்றோ "மார்க்சின் வகுத்த வழியிலே வளர்ந்தவர்கள் நாங்கள்!" என்று ஒரு பக்கமும், "அந்த ஜெர்மானிய யூதன் செய்துவிட்டுப்போன தீவினைதானே இந்த கும்பலின் தோற்றத்திற்குக் காரணம்!" என்று மற்றோர் பக்கமும் உலக அரங்கில் போராடும் அளவில் பிரச்னையாகிவிட்டது மார்க்சின் தத்துவம்.

மார்க்சின் கொள்கைகளை விரும்பினாலும், வெறுத்தாலும், அந்தக் கொள்கைகளை அறிந்து கொள்ளாமல் அரசியல் அரங்கில் காலெடுத்து வைக்க முடியாத நிலை இன்று ஏற்பட்டு விட்டது.

எந்தத் தனி மனிதனும் தன் உரிமைக்காகப் பாடுபடும்போது அவனையறியாமலே மார்க்சின் பள்ளிக்கு வந்துவிடுவான்.

ஆகவேதான் "தனிப்பட்ட மனிதன் எவனும் மார்க்சின் அளவு, மனித வர்க்கத்தின் அமைப்பை மாற்றவில்லை" என்று கூறுகின்றனர்.

ஃ ஃ ஃ

முதலாளி—தொழிலாளி போராட்டம், மார்க்ஸ் எழுதுவதற்கு முன்பே, ஐரோப்பா வெங்கும் விவாதிக்கப்பட்டது. மதப் புரட்சியின் பயனால் மூடநம்பிக்கையினின்று விடுபட்ட ஐரோப்பிய மக்கள், மறுமலர்ச்சியடைந்து 'தெய்வத்தின் பிரதிநிதிதான் அரசன்' என்ற பரம்பரை தத்துவத்தை அடியோடு தகர்த்தெறிந்தனர்: பிரஞ்சு நாட்டிலே புரட்சி பூத்தது. மற்ற நாடுகளிலே மக்களாட்சி மலர்ந்தது. மன்னர்கள் கை ஒடுக்கப்பட்டது.

ஆனால் இந்த மாறுதல்கள், எதுவும் இல்லாதவனை இல்லாதவனாகவே வைத்திருந்தது.

இந்த நேரத்திலே ஏற்பட்ட 'தொழிற் புரட்சி' இல்லாதவனை தொழிலாளியாக்கியது. நாடெங்கனும் தொழிற்சாலைகள் பெருகின. நாகரிகம் வளர்ந்தது. அறிவு வளர்ந்தது. ஆனால் இல்லாதவன் இன்னும் அவதிக்காட்பட்டே வாழ்ந்து வந்தான்.

தேசத்தினுடைய செல்வம் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட்டபின், ஓங்கி வளர்ந்தது. ஆனால் அதில் பெரும்பகுதி ஒரு சில ஆலை முதலாளிகள் கையில் போய்க்கொண்டே இருந்தது!

இல்லாதவன் தன் உடலில் வலுவிருந்து உழைத்தால்தான் உண்ண முடிந்தது. அதுவும் உழைக்க சந்தர்ப்பமும், அவனுழைப்பை ஏற்றுக்கொள்ள முதலாளியும் கிடைத்தால் தான்!

அப்படி தன் உழைப்பில் உண்டாக்கப்பட்ட பொருளைக்கூட அவன் அனுபவிக்க முடியாது. அதை அபகரிக்கும் முதலாளி, உழைத்தவனை தன் அடிமையாக்குமளவு அவன் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தினான். ஆகவே முதலாளியின் முதலும், பாட்டாளியின் உழைப்பும் சேர்ந்து உண்டாக்கிய பொருளின்மீது ஒரு சாராருக்கு பங்கு இல்லை—கூலிதான்—அதுவும் அரைவயிற்றுக் கஞ்சிதான் என்ற நிலை ஏற்பட்டது.

இதுமாத்திரமில்லை. நாட்டிற்கு எந்தெந்த பொருள்கள் தேவையோ அவைகளைப் பற்றி கவலைப்படாமல், எந்தெந்த பொருள் உற்பத்தி செய்தால் லாபமோ, அவைகளையே தயாரித்தது முதல்போட்ட வர்க்கம்.

இது இல்லாதவர்கள் கூட்டத்தை வெகுவாக

களை உலகம் பூராவும் நிறுவி உலகத் தொழிலாளர்களை ஒன்றுபடுத்த முனைந்தார்.

தொழிற்சாலைகள் வளர வளர, தொழிலாளர் வளருவர். முதலாளிகள் லாபம் பெற பெற சிறிய முதலாளிகள் ஒழிவர். பெரும் முதலாளிகள் வளர, வளர தொழிலாளி—முதலாளி வேறுபாடு நன்கு தெரியும். அதற்குள் தொழிலாளிகள் ஒன்றுபட்டு நின்றால் அந்த ஒருசில முதலாளிகளை ஒழித்துவிட்டு கம்யூனிச அரசை நிறுவலாம் என்று கூறிவிட்டு மறைந்தார் மார்க்ஸ்.

தொழிற்சாலைகள் வளர்ந்துவந்த இங்கிலாந்திலேயும், ஜெர்மனியிலும்தான் முதல் கம்யூனிச அரசாங்கம் ஏற்படும் என்று மார்க்ஸ் எழுதிப்போனார்.

ஆனால் அவருக்கு உண்மையான சீடர்கள் தொழில் வளம் குன்றி, பிற்போக்கில் வதிந்த ரஷ்யாவில் கிடைத்தனர்.

மார்க்சின் தத்துவங்களை ஆர்வத்தோடு படித்து உணர்ந்த கர்மவீரர் லெனின் சரியான சந்தர்ப்பத்திலே ரஷ்ய அரசாங்கத்தைக் கைப்பற்றினர், மார்க்சின் வழியைப் பின்பற்றி கம்யூனிச அமைப்போடு கூடிய அரசை நிறுவினர். உலகம் பூராவும் முதலாளித்துவம் கொக்கரிக்கும்போதும், மார்க்சின் தத்துவத்தையே தன் முடிபாக வைத்துக்கொண்டு, தேவைக்கேற்ற இடைக்கால மாறுதல்களை செய்தாலும் முடிவை அடைய அரும்பாடு பட்டார், லெனின்.

மார்க்ஸ் எதிர்பார்த்த புரட்சி ஜெர்மனியிலோ, இங்கிலாந்திலோ வரவில்லை.

மார்க்சின் கருத்தை பின்பற்றி ஜெர்மனியில் ரோஸா லக்ஸம்பர்க் என்ற அறிவுக் களஞ்சியமான பெண்மணியும் மற்றும் சிலரும் தொழிலாளர் இயக்கங்களை இந்த நூற்றுண்டின் ஆரம்பத்தில் நடத்தினர். ஆனல் அவருடைய முயற்சி பலிதமாகும் முன்பே முதலாளி வர்க்கத்தால் ரோஸா கொலைசெய்யப்பட்டார்.

இங்கிலாந்திலோ, மார்க்சின் கொள்கைகளின் அடிப்படைகளை ஒத்துக்கொண்டனர். அதற்கு மேல் கம்யூனிச அரசாங்கம் அமைக்க புரட்சி செய்யுமளவு அங்கே தேவையில்லாமல் போய் விட்டது. காரணம், காலனி நாடுகளில் வியாபாரம் செய்துவந்த லாபத்தில் ஒரு பகுதியை வாரியிறைத்து தொழிலாளரை திருப்தி செய்யுமளவு வளர்ந்துவிட்டது இங்கிலாந்து.

இருந்தபோதிலும் தொழிலாளர் ஒன்று சேர்ந்த தொழிற்கட்சி, 'தொழிலரசு' நிறுவுவதைத் தன் குறிக்கோளாகக் கொண்டு ஜனநாயக முறையிலே போரிட ஆரம்பித்தது. சென்ற நூற்றுண்டின் இறுதியில் ஆரம்பித்த 'பேபியன்' சோஷியலிஸ்ட்டுகள் தொழிலாளர்களைத் தட்டியெழுப்பும்வேலையில் ஈடுபட்டனர். பெர்னட்ஷா, சிட்னி வெப், பியாட்ரிஸ் வெப், அன்னிபெஸண்ட் முதலிய பேரறிஞர்கள் சேர்ந்து ஆரம்பித்த அறிவியக்கம் அது. "பேபியன்" சோஷியலிஸ்டுகள் எழுதி வெளியிட்ட கருத்துகள் முதலாளித்துவ வாதங்களை தவிடு பொடியாக்கின. அறிவுலகத்திலே சமதர்ம கொள்கை நிரந்தர இடத்தை பிடித்தது.

பிரான்ஸிலே கம்யூனிச கொள்கை "சின்டிகலிசம்" என்ற அமைப்பில் உருவாகியது. கட்டுப்பாடான அமைப்பைக் கொண்ட தொழிற் சங்கங்கள் முதலாளித்துவ அரசாங்கத்தை ஒழித்து பதவியேற்கும் என்று கூறி, தொழிற் சங்கங்களை வலுப்படுத்தினர் பிரெஞ்சு புரட்சிவாதிகள்.

இப்படி உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் மார்க்சின் கொள்கைகள் வேரூன்றின. அந்தந்த நாட்டின் கலாசார, பொருளாதார, நில அமைப்புகளின்படி சிற்சில மாற்றங்களோடு 'மார்க்சிசம்' வளர்ந்தது—வளர்ந்துவருகிறது. ஆனல் மார்க்சின் தத்துவங்களின் நடைமுறைகள் வேண்டுமானல் மாற்றப்படவேண்டுமே ஒழிய அவர் கூறிய அடிப்படையும் முடிவும் நிச்சயமாக மாற்ற முடியாதவை. "சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற வசதி" என்ற அடிப்படைக் கொள்கை எக்காலத்தும் மனித சமுதாயத்திற்கு இன்றியமையாதது.

"அழிந்துபோகவேண்டிய முதலாளி வர்க்கம், வாழப்பிறந்த பாட்டாளி வர்க்கத்தை அழிக்கச் சதி செய்கிறது. முதலாளி வர்க்கத்தின் எலும்புக்கூடுகளை சேகரித்துவைக்க பொருட்காட்சி சாலையில் தனியிடம் ஒதுக்கப்பட்டிருக்கிற என்பதை உணராமல், அது பாட்டாளி வர்க்கத்தோடு போரிடுகிறது!" என்று ஆத்திரமாக எழுதினன் லியோன் டிராட்ஸ்கி.

அதுபோல வாழவேண்டியவர்கள் உழைப்

களை உலகம் பூராவும் திறவி உலகத் தொழிலாளர்களை ஒன்றுபடுத்த முனைந்தார்.

தொழிற்சாலைகள் வளர வளர, தொழிலாளர் வளருவர். முதலாளிகள் லாபம் பெற, பெற சிறிய முதலாளிகள் ஒழிவர். பெரும் முதலாளிகள் வளர, வளர தொழிலாளி—முதலாளி வேறுபாடு நன்கு தெரியும். அதற்குள் தொழிலாளிகள் ஒன்றுபட்டு நின்றால் அந்த ஒருசில முதலாளிகளை ஒழித்துவிட்டு கம்யூனிச அரசை நிறுவலாம் என்று கூறிவிட்டு மறைந்தார் மார்க்ஸ்.

தொழிற்சாலைகள் வளர்ந்துவந்த இங்கிலாந்திலேயும், ஜெர்மனியிலும்தான் முதல் கம்யூனிச அரசாங்கம் ஏற்படும் என்று மார்க்ஸ் எழுதிப்போனார்.

ஆனால் அவருக்கு உண்மையான சீடர்கள் தொழில் வளம் குன்றி, பிற்போக்கில் வதிந்த ரஷ்யாவில் கிடைத்தனர்.

மார்க்சின் தத்துவங்களை ஆர்வத்தோடு படித்து உணர்ந்த கர்மவீரர் லெனின் சரியான சந்தர்ப்பத்திலே ரஷ்ய அரசாங்கத்தைக் கைப்பற்றினார், மார்க்சின் வழியைப் பின்பற்றி கம்யூனிச அமைப்போடு கூடிய அரசை நிறுவினார். உலகம் பூராவும் முதலாளித்துவம் கொக்கரிக்கும்போதும், மார்க்சின் தத்துவத்தையே தன் முடிபாக வைத்துக்கொண்டு, தேவைக்கேற்ற இடைக்கால மாறுதல்களை செய்தாலும் முடிவை அடைய அரும்பாடு பட்டார், லெனின்.

மார்க்ஸ் எதிர்பார்த்த புரட்சி ஜெர்மனியிலோ, இங்கிலாந்திலோ வரவில்லை.

மார்க்சின் கருத்தை பின்பற்றி ஜெர்மனியில் ரோஸா லக்ஸம்பர்க் என்ற அறிவுக் களஞ்சியமான பெண்மணியும் மற்றும் சிலரும் தொழிலாளர் இயக்கங்களை இந்த நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடத்தினர். ஆனால் அவருடைய முயற்சி பலிதமாகும் முன்பே முதலாளி வர்க்கத்தால் ரோஸா கொலைசெய்யப்பட்டார்.

இங்கிலாந்திலோ, மார்க்சின் கொள்கைகளின் அடிப்படைகளை ஒத்துக்கொண்டனர். அதற்குமேல் கம்யூனிச அரசாங்கம் அமைக்க புரட்சி செய்யுமளவு அங்கே தேவையில்லாமல் போய்விட்டது. காரணம், காலனி நாடுகளில் வியாபாரம் செய்துவந்த லாபத்தில் ஒரு பகுதியை வாரியிறைத்து தொழிலாளரை திருப்தி செய்யுமளவு வளர்ந்துவிட்டது இங்கிலாந்து.

இருந்தபோதிலும் தொழிலாளர் ஒன்று சேர்ந்த தொழிற்கட்சி, 'தொழிலரசு' நிறுவுவதைத் தன் குறிக்கோளாகக் கொண்டு ஜனநாயக முறையிலே போரிட ஆரம்பித்தது. சென்ற நூற்றாண்டின் இறுதியில் ஆரம்பித்த 'பேபியன்' சோஷியலிஸ்ட்டுகள் தொழிலாளர்களைத் தட்டியெழுப்பும்வேலையில் ஈடுபட்டனர். பெர்னாட்ஷா, சிட்னி வெப், பியாட்ரிஸ் வெப், அன்னிபெஸண்ட் முதலிய பேரறிஞர்கள் சேர்ந்து ஆரம்பித்த அறிவியக்கம் அது. "பேபியன்" சோஷியலிஸ்டுகள் எழுதி வெளியிட்ட கருத்துகள் முதலாளித்துவ வாதங்களை தவிடு பொடியாக்கின. அறிவுலகத்திலே சமதர்ம கொள்கை நிரந்தர இடத்தை பிடித்தது.

பிரான்ஸிலே கம்யூனிச கொள்கை "சின்டிகலிசம்" என்ற அமைப்பில் உருவாகியது. கட்டுப்பாடான அமைப்பைக் கொண்ட தொழிற் சங்கங்கள் முதலாளித்துவ அரசாங்கத்தை ஒழித்து பதவியேற்கும் என்று கூறி, தொழிற் சங்கங்களை வலுப்படுத்தினர் பிரெஞ்சு புரட்சிவாதிகள்.

இப்படி உலகத்தின் பல்வேறு பாகங்களிலும் மார்க்சின் கொள்கைகள் வேரூன்றின. அந்தந்த நாட்டின் கலாசார, பொருளாதார, நில அமைப்புகளின்படி சிற்சில மாற்றங்களோடு 'மார்க்சிசம்' வளர்ந்தது—வளர்ந்துவருகிறது. ஆனால் மார்க்சின் தத்துவங்களின் நடைமுறைகள் வேண்டுமானால் மாற்றப்படவேண்டுமே ஒழிய அவர் கூறிய அடிப்படையும் முடிவும் நிச்சயமாக மாற்ற முடியாதவை. "சக்திக்கேற்ற உழைப்பு; தேவைக்கேற்ற வசதி" என்ற அடிப்படைக் கொள்கை எக்காலத்தும் மனித சமுதாயத்திற்கு இன்றியமையாதது.

"அழிந்துபோகவேண்டிய முதலாளி வர்க்கம், வாழப்பிறந்த பாட்டாளி வர்க்கத்தை அழிக்கச் சதி செய்கிறது. முதலாளி வர்க்கத்தின் எலும்புக்கூடுகளை சேகரித்துவைக்க பொருட்காட்சி சாலையில் தனியிடம் ஒதுக்கப்பட்டிருக்கிற என்பதை உணராமல், அது பாட்டாளி வர்க்கத்தோடு போரிடுகிறது!" என்று ஆத்திரமாக எழுதினான் லியோன் டிராட்ஸ்கி.

அதுபோல வாழவேண்டியவர்கள் உழைப்

விஞ்ஞானமும், சமதர்மமும்

[விஞ்ஞான முடிபுகளும், சமதர்மக் கொள்கையும் எவ்வாறு ஒன்றோடொன்று பிணைந்திருக்கின்றன என்பதுபற்றி, இங்கிலாந்தில் முதன்மைபெற்று விளங்கிடும் ஒருவரான, பேராசிரியர் எச். வி. லெவி என்பவர் பின்வருமாறு கூறுகிறார்.]

"கடந்த மாபெரும் போருக்குப்பின், விஞ்ஞானத்தைப் பற்றியும், அதன் நோக்கத்தைப் பற்றியும் அறிந்துகொள்ள வேண்டுமென்ற ஆவல் பொதுமக்களிடம் எழுந்துள்ளது. அரசியல்வாதிகள், தங்கள் நாட்டு இரகசிய ஆயுதங்களைப்பற்றியும், அந்த ஆராய்ச்சிகளில் தாங்கள் அடைந்துள்ள அபரிமித முன்னேற்றத்தைப் பற்றியும் பெருமையுடன் கூறிக்கொள்ளுகின்றனர். இனிமேல் எழும் சண்டைகளில் வெற்றி தோல்வி என்பது, அந்தந்த நாடுகள் நடத்தும் ஆராய்சசிகளின் வெற்றியைப் பொறுத்திருக்கிறது. இந்த நெருக்கடியான கட்டத்தில், எல்லோருடைய கவனமும், நம்பிக்கையும் விஞ்ஞானத்தின்பால் திரும்பியிருக்கின்றன.

முன்பெல்லாம், சமதர்மம் என்றால் ஒருவித மனிதாபிமானக் கொள்கை, அரசியல் கோட்பாடு என்று நினைத்தவர்களெல்லாம், சமதர்மத்தின் இலட்சியமானது விஞ்ஞானத்தின் முழு பலனை நடைமுறையில் கொண்டுவருவதே என்பதைத் தெரிந்துகொண்டிருப்பார்கள். வாழ்க்கையின் எல்லாத் துறைகளிலும் விஞ்ஞான மனப்பான்மையையும், விஞ்ஞான வளர்ச்சியையும் கொண்டுவருவதே சமதர்மத்தின் வேலைத் திட்டமாகும். இதை, சமதர்மத்தை ஒத்துக் கொள்பவர்களும், வெறுத்து ஒதுக்குபவர்களும் அறிந்திருக்கிறார்கள்.

இயற்கைச் சக்திகளையும், பொருள்களமைப்பையும், உடலியல், பொறியியல் இவைபோன்றவற்றையும், ஆராய்வதை மட்டுமே விஞ்ஞானத்தின் வேலை என்று சிலர் நினைக்கின்றனர். இந்த ஆராய்ச்சிகளால் விஞ்ஞான மனப்பான்மை உயர்வதுடன், இயற்கைச் சக்திகளைப்பற்றியும், நமது சூழ்நிலையைப்பற்றியும் நமது அறிவு வளர்கிறது என்பது உண்மையே. ஆனால் விஞ்ஞானத்தின் வேலை அத்துடன் நின்றுவிடக் கூடாது. சமுதாய அமைப்பையும், அதன் மாறுதல்களையும் அறிவதற்கு விஞ்ஞான முறை பயன்படவேண்டும். சமுதாய வளர்ச்சியில் விஞ்ஞான முறையும், அதன் விளைவுகளும் மிக முக்கியமாகின்றன. இந்த உண்மையை உணர்ந்தால், விஞ்ஞானத்தின் வேலை பொருளியல், பொறியியல், உடலியல் இவைகளைத் தனிப்பட்டு ஆராய்வதுடன் நில்லாமல், சமுதாய அமைப்பையும், அதன் வளர்ச்சியைப் பற்றியும் ஆராய்வதற்கும் உதவும்.

விஞ்ஞானத்தின் வளர்ச்சியால் கடந்த நான்கு நூற்றாண்டுகளாக அடைந்துள்ள சமூக மாறுதல்கள், மனிதனின் வாழ்க்கைமுறையில் மாபெரும் புரட்சியைச் செய்திருக்கின்றன. ஆனால் கடந்த கால் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள மாறுதல்கள், அதைவிடக் கடந்த பத்து ஆண்டுகளுக்குள் ஏற்பட்ட மாறுதல்கள், மிகப் பலமானவை. மிகவிரைவுடனே இந்த மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றன. எனவே, அந்த மாறுதல்களின் அடிப்படையை உணரவும், உணர்ந்து கட்டுப்படுத்தவுமான பொறுப்பும் மிக முக்கியமானது, உடனடியான தேவை. விஞ்ஞான முறையில் சமுதாயத்தை அமைக்கவும், வளர்க்கவும், விஞ்ஞான வளர்ச்சி பயன்படுத்தப்பட வேண்டும். விஞ்ஞானத்தையோ, சமதர்மத்தையோ, யாராவது இன்று மறுக்கிறார்களென்றால், அவர்கள் நாகரிக வாழ்வின் அடிப்படையை மறுக்கிறார்கள் என்றுதான் அர்த்தம்.

பாளிகள். அதை உறிஞ்சிக் கொழுக்க நினைப்பவர்கள் ஒழிக்கப்படவேண்டியவர்கள். இந்த வேலையைப் பலாத்கார முறையில் செய்வதா; அமைதியான முறையில் செய்வதா என்று வேண்டுமானால் அபிப்பிராயபேதம் ஏற்படலாமே தவிர சமமான சமுதாயத்தை உருவாக்குவதில் பங்குகொள்ள எல்லோரும் ஒன்றுபட்டுதானாகவேண்டும். ஆகவேதான் கட்சிகள் வெவ்வேறாக இருந்தாலும் மார்க்சிஸ்டுகள் உலகத்திலே பெருகிவிட்டனர். அவர்கள் வளருவது மனித சமுதாயம் நல்வாழ்வு நோக்கிச் செல்வதற்கு அடையாளம். அந்தப் பெரும் பணியில் ஈடுபடவேண்டியது எத்துணை அவசியம் என்பதைத்தான் இந்த 'மேதினம்" ஞாபகப்படுத்துகிறது.

தேவதைகள் பறந்துவிட்டன!

[தமிழாக்கம் : இரா. நெடுஞ்செழியன்]

இப்பொழுது, எவன் கொழுந்துவிட்டெரியும் பகுத்தறிவுச் சுடரைத் தன்மூளையில் ஏற்றி வைத்திருக்கிறானோ, எவன் ஆராய்ச்சி செய்து பார்க்கும் அறிவைப் படைத்திருக்கிறானோ, எவன் சிந்தித்துப் பார்க்கும் தன்மையைக் கொண்டிருக்கிறானோ, எவன் சான்றுகளைச் சரி தூக்கிப் பார்க்கும் திறம் உடையவனாக இருக்கிறானோ, அவன், அடையாளங்களிலும், அதிர்ஷ்ட - துர்அதிர்ஷ்ட நாட்களிலும், அதிர்ஷ்ட - துர்அதிர்ஷ்ட எண்களிலும் நம்பிக்கை கொள்ளவேமாட்டான். வெள்ளிக்கிழமைகளைப் போன்றவையேதாம் வியாழக்கிழமைகளும், என்பதையும், பன்னிரண்டைக் காட்டிலும் பதின்மூன்று எந்த விதத்திலும் கேடுபயக்கக்கூடியது அல்ல என்பதையும் அவன் அறிவான். சிவப்புக் கற்கள், வைரங்கள் அல்லது சாதாரண கண்ணாடி எந்த அளவுக்கு மனிதனைப் பாதிக்குமோ அதே அளவுதான் வெள்ளைக் கற்களும் பாதிக்கும் என்பதை அவன் அறிவான். ஒரு பெண்ணின் திருமண வாய்ப்புகள், ஒரு மலரிலுள்ள இதழ்களைப் பொறுத்தோ அல்லது ஒரு ஆப்பிள் பழத்திலுள்ள விதைகளைப் பொறுத்தோ, கூடவோ குறையவோ ஆகிவிடா என்பதையும் அவன் அறிவான். ஒரு படக் கொட்டகைக்குள் முதன்முதல் நுழைகிறவன் ஒன்றரைக் கண்ணனாக இருந்தாலும் ஒடிந்த கையனாக இருந்தாலும், வணங்கிய முதுகினனாக இருந்தாலும் வளைந்த காலனாக இருந்தாலும் அல்லது 'அப்பலோ' போல முழு அழகுவாய்ந்தவனாக இருந்தாலும் அவன் கவலைப்படுவதில்லை. குடும்பத்திற்கு எவ்வித குறைபாடும் தோன்றாத நிலையில்கூட, வேற்றுப் பூனைக்கு இடமளிக்க மறுப்பதால், ஒன்றும் நேராது என்பதை அவன் அறிவான். ஒரு முக்கியமான மனிதன் இறந்து படப்போகிறான் என்பதற்காக, முழு நிலவு நாளில் ஆந்தையொன்று அலறிக்காட்டாது என்பதை அவன் அறிவான். மக்கட் கூட்டம் எல்லாம் இறந்துபட்டாலும்கூட, வால் நட்சத்திரங்களும், கிரகணங்களும் வரத்தான் செய்யும் என்பதை அவன் அறிவான். சிறிய வானவில்லைக் கண்டோ அல்லது வடக்கே இருளைக் கிழித்துக்கொண்டு வெளிச்சம் வெளிப்படுவதைக்கண்டோ அவன் அஞ்சுவதில்லை. மனித சமுதாயத்தைச் சிறிதளவும் பொருட்படுத்தாமலேயே இவையெல்லாம் நிகழ்கின்றன என்பதை அவன் அறிவான். வெள்ளங்கள் அழிவையுண்டாக்கும், புயற்காற்றுகள் பாழ்படுத்தும், நில அதிர்ச்சிகள் விழுங்கும் என்பதையெல்லாம் அவன் உறுதியாக உணர்கிறான். நட்சத்திரங்கள் ஒளிவீசும், உலகைச் சுற்றி இரவும் பகலும் ஒன்றையொன்று தொடர்ந்து கொண்டேயிருக்கும், பூக்கள் தம் நறுமணத்தைக் காற்றில் கமழச்செய்யும், காலை மாலை வேளைகளில், மேகங்கள் நிறைந்திருக்கும் பொழுது, ஒளி, ஏழுநிற வானவில்லை, மக்களைப் பற்றிச் சிறிதும் கவலைப்படாமலே வானத்தில் தீட்டும் என்பதையெல்லாம் அவன் உறுதியாக அறிகிறான்.

நல்ல சிந்தனையும், தெளிவான உணர்வும் உடைய மனிதன் சாத்தான் வாழ்கிறான் என்பதை நம்பமாட்டான். அவன் உறுதியாக உணர்கிறான், பேய்களும், பூதங்களும், பிசாசுகளும், கெட்ட ஆவிகளும், அறியாமையும் அச்சமும்கொண்டவர்களின் கற்பனையுள்ளத்தில்தான், வாழ்கிறார்கள் என்பதை. மிகக் கீழ்த்தரமான கட்டுக்கதைகளெல்லாம் எப்படி இயற்றப்பட்டன என்பதை அவன் அறிகிறான். அந்தக் கட்டுக்கதைகள் எல்லா மதங்களிலும்

எந்த அளவுக்கு வேலைசெய்கின்றன என்பதையும் அவன் அறிகிறான். பூதங்களிடத்தும், கெட்ட ஆவிகளிடத்தும் மக்களுக்கு ஏற்பட்ட நம்பிக்கை, பன்னெடும் நூற்றாண்டுகளாக, எல்லா நாடுகளிலும் இருந்துவருகிறது என்பதையும் அவன் அறிகிறான். சாதாரணக் குடியானவன் போலவே, மதக்குருக்களும் மிக அழுத்தந் திருத்தமான நம்பிக்கை கொண்டிருந்தனர் என்பதையும் அவன் அறிகிறான். அந்த நாட்களில் மிகப்படித்தறிந்தவர்களும், மிக அறியாமையில் மூழ்கியவர்களும் ஒரே மாதிரியான ஏமாற்றுக்காரர்களாகத் திகழ்ந்தனர். அரசர்களும் அவரது அவையினரும், பெண்களும் பேடிகளும், போர்வீரர்களும் கலைவாணர்களும், அடிமைகளும் குற்றவாளிகளும், கடவுளை எந்த அளவு அழுத்தமாக நம்பினார்களோ அதே அளவு அழுத்தமான நம்பிக்கையைத்தான் சாத்தானைப் பொறுத்தும் கொண்டிருந்தனர்.

இந்த நம்பிக்கைக்கு அடிப்படையாக எந்த ஒரு சான்றும் இருக்கவில்லை; இதுவரையிலும் இருந்ததில்லை. இந்த நம்பிக்கை எந்த உண்மை மீதும் நிலைநின்றதில்லை. இந்த நம்பிக்கையானது, தவறுகளாலும், உயர்வு நவிற்சிகளாலும், பொய்களாலும் ஆதரிக்கப்பட்டுவந்தது. அந்தத் தவறுகள் இயல்பாகவே எழுந்தனவாக இருந்தன; உயர்வு நவிற்சிகள் மக்களின் உணர்வற்ற நிலையிலேயே வெளிவந்தன; பொய்களெல்லாம் கூடப் பொதுவாக நாணயமாகச் சொல்லப்பட்டன. இந்தத் தவறுகள், இந்த உயர்வு நவிற்சிகள், இந்தப் பொய்கள் ஆகிய இவற்றிற்கெல்லாம் அடிப்படையாக இருந்தது, போதிசயத்தின்பால் கொண்ட அன்பேயாகும். அதிசயம், பேராசைகொண்ட காதுகளால் கேட்கப்பட்டது; அகன்ற கண்களால் பார்க்கப்பட்டது; அறியாமை திறந்த வாயால் பருகப்பட்டது!

அறிவு வளர்ந்த ஒருவன், இந்த நம்பிக்கை வளர்ந்த வரலாற்றை நன்கு அறிவான். பல நூற்றாண்டு காலமாக நம்பிக்கை பற்றிய உண்மை, 'புனித பைபிளால்' நிலைநாட்டப்பட்டு வந்தது என்பதையும் அவன் அறிவான். பழைய வேதம், சாத்தானைப்பற்றியும் தீய ஆவிகளைப் பற்றியும் எழுதப்பட்ட கதைகளால் நிரம்பியது என்பதையும், அதுபோலவே புதிய வேதமும் நிரம்பியது ஆகும் என்பதையும் அவன் அறிவான். ஏசு கிருஸ்துவே சாத்தானையும், தீய ஆவிகளையும் நம்பியிருந்தவர் என்பதையும், ஆடவர் பெண்டிர் ஆகியோரைப் பிடித்திருந்த அந்தத் தீய ஆவிகளை, விரட்டுவதை, அவர் முக்கிய பணியாகக் கொண்டிருந்தார் என்பதையும் அவன் அறிவான். புதிய வேதத்தில் சொல்லப்பட்டபடி, ஏசுகிருஸ்துவே தீய ஆவியால் ஆசைகாட்டி மயக்கப்பட்டார் என்பதையும், சாத்தானால், அவனது கோயிலின் உச்சிக்குக் கொண்டுபோகப்பட்டார் என்பதையும் அவன் அறிவான். புதிய வேதமானது உள்ளபடியே ஆண்டவனால் மொழியப்பட்டது எனில், பூதங்கள்—பிசாசுகள் இருக்கின்றன என்பதையும், அவைகள் மக்களை வசப்படுத்தியிருக்கின்றன என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன்!

இந்தத் தீய ஆவிகள் இல்லை என்று மறுப்பது—இந்தச் சாத்தான் இல்லை என்று மறுப்பது, புதிய வேதத்தின் உண்மையையே மறுப்பதாகும். இருளில் பிசாசுகள் இல்லை என்று மறுப்பது, ஏசு கிருஸ்துவின் சொற்களையே மறுத்துக்கூறுவதாகும். இந்தப் பூதங்கள் இல்லை என்றால், இவைகள் நோயை உண்டாக்கவில்லை என்றால், இவைகள் மக்களுக்கு ஆசைகாட்டி, அவர்களைத் தவறான வழியில் இழுத்துச் செல்லவில்லை என்றால், பிறகு, கிருஸ்து, அறியாமை நிரம்பியவராகவும், மூட நம்பிக்கை மனிதராகவும், மனங்குழம்பியவராகவும், ஏமாற்றுக்காரராகவும்தாம் இருக்கவேண்டும்; அல்லது, அவர் சொல்லியதாகவும் செய்ததாகவும் சொல்லப்படுகிற புதியவேதம் என்பது, உண்மையான பதிவாக இருக்கமுடியாது. நாம் பேய்—பூதம்—பிசாசு பற்றிய நம்பிக்கையைக் கைவிடுகிறோம் என்றால், பழைய—புதிய வேதங்களின் கடவுள் கருத்துக்களையும் நாம் கைவிடத்தான் வேண்டும்! நாம் கிருஸ்துவின் கடவுள் தன்மையைக் கைவிடத்தான் வேண்டும்! தீய ஆவிகள் இருப்பதை மறுப்பது என்பது, கிருஸ்தவ மதத்தின் அடிப்படையையே அடியோடு அழிப்பதாகும். அப்படிக்கிப்படிப் பேசுவதற்கு ஒன்றுமில்லை. இரண்டிற்கும் ஒத்தவொரு சமாதானம் தேடுவது, ஆகாத ஒன்றாகும். புதிய வேதத்தில் சொல்லப்பட்ட, பிசாசுகளை விரட்டுவதுபற்றிய கருத்துக்களெல்லாம் தவறு என்று ஆனால், பின்னர் அந்தப் புனித நூலின் எந்தப் பகுதிதான் உண்மையாக இருக்கமுடியும்?

அதன் உண்மைவழிப் பார்க்கப்போனால், ஏடன் தோட்டத்தில் சாத்தானுக்கு ஏற்பட்ட வெற்றியின் விளைவே, கிருஸ்துவைத் தோற்றம் செய்யும்படியான அவசியத்திற்குக் கொண்டு வந்துவிட்டது; கிருஸ்து உயிர்த்தியாகம் செய்வதற்கு வழி அமைத்தது; கிருஸ்துவைச் சிலுவையில் அறைந்தது; தந்தை—மகன்—புனிதப் பிசாசு ஆகிய மூன்றும் சேர்ந்த முத்தன்மையை நமக்குக் கொடுத்தது!

சாத்தான் வாழவில்லை என்றால், கிருஸ்தவ மதக் கருத்துக்கள் அத்தனையும் சிதறுண்டு போகும்; "கிருஸ்தவம்" என்று சொல்லப்படுகிற பெருங்கட்டிடம் முழுவதும் சரிந்துபோய் விடும்! பாதிரிமார்களாலும் குருமார்களாலும், புரோகிதர்களாலும் மதவாதிகளாலும், தவறுகளாலும் பொய்மைகளாலும், ஜாலவித்தைகளாலும் அதிசயங்களாலும், குருதியினாலும் நெருப்பினாலும், காட்டுமிராண்டிகளிடமிருந்து கற்றுக்கொண்ட பொய்களாலும் பொய்மைக் கதைகளாலும் கட்டப்பட்ட "கிருஸ்தவம்" என்ற அந்தப் பெருங்கட்டிடம் உருத்தெரியாமல் அழிந்துபோய்விடும்!

பூதங்களிடத்தும் தீய ஆவிகளிடத்தும் கொண்டிருந்த நம்பிக்கையை நாம் கைவிடுவோமேயானால், பேயாட்டுபவள் என்று ஒருத்தி வாழ்ந்திருக்கமுடியாது என்ற முடிவுக்கு நாம் வரவேண்டியவர்களாவோம். இப்பொழுது, அறிவுள்ள எந்த மனிதனும், பேய்—பூதம்—பிசாசு ஆகியவற்றை அடக்கியாளும் தன்மையில் நம்பிக்கை கொள்வதில்லை. அது ஒரு ஏமாற்று வித்தையாகவே இருந்துவந்திருக்கிறது என்பதை நாம் அறிவோம். நடைபெற முடியாத ஒரு குற்றத்தைச் செய்தார்கள் என்ற காரணத்துக்காக, ஆயிரமாயிரம் ஆடவரும், பெண்டிரும், குழந்தைகளும் சித்ரவதை செய்யப்பட்டும், கொளுத்தி எரிக்கப்பட்டும் கொடுமைக்குள்ளாக்கப்பட்டுப்போயினர் என்பதை நாம் இப்பொழுது அறிகிறோம். மத நம்பிக்கையால் நமது உள்ளங்கள் பாழ்படாமலிருந்திருக்குமேயானால், பேயாட்டுபவர்கள் வாழ்ந்ததைப்பற்றிக் கற்பிக்கிற புத்தகங்களெல்லாம், அறியாமையும் மூடநம்பிக்கையும் கொண்டவர்களாலேயே எழுதப்பட்டன என்பதை, நாம் இப்பொழுது நன்கு அறியலாகும். பேயாட்டுபவர்கள் வாழ்ந்ததைப் பழைய வேதம் உறுதிப்படுத்துகிறது என்பதையும், நாம் இப்பொழுது, அறிந்திருக்கிறோம். அந்தப் 'புனித வேத'த்தின்படி, ஜெகோவா பேயாட்டுவதில் நம்பிக்கை கொண்டிருந்தார் என்பதும், அவரைப் பின்பற்றினவர்களுக்கு அவர், "பேயாட்டுபவள் ஒருத்தியை வாழவிட்டுவிட்டு நீங்கள் துன்பம் அடையாதீர்கள்" என்று போதனை புரிந்தார் என்பதும் அறியப்படுவனவாகும்.

இந்த ஒரு கட்டளை, இந்தச் சாதாரணமான ஒருவரி போதும், ஜெஹோவா கடவுள் அல்ல என்பது மட்டுமல்லாமல், அவர் பரிதாபத்திற்குரிய—அறியாமை நிரம்பிய—மூடநம்பிக்கை மனிதர் என்பதை நிரூபிக்க. பழைய வேதம் சாதாரண மனிதர்களால் அதாவது காட்டுமிராண்டிகளால் எழுதப்பட்டதாகும் என்பதை, ஐயப்பாட்டிற்குச் சிறிதும் இடமில்லாத வகையில் இந்த வரி ஒன்றே நிரூபிக்கும்.

பேயாட்டும் தன்மையிலுள்ள நம்பிக்கையைக் கைவிடுவது என்பது, பைபிளையே கைவிடுவதாகும் என்று, ஜான் வெஸ்லி கூறியது, முற்றிலும் உண்மையாகும்.

பூதத்தைக் கைவிடுவதென்றால், பின்னர் வேத புத்தகத்தை வைத்துக்கொண்டு என்ன செய்வது? அஹாம் என்பானை ஏமாற்றுவதற்காக ஜெஹோவாவால் அனுப்பப்பட்ட பொய்யான ஆவிகளுக்குப் பின்னர் எப்படிப்பட்ட சமாதானத்தைத் தேடுவது?

பேயாட்டுவது ஒரு மூடநம்பிக்கை என்று ஒப்புக்கொண்ட போதனையாளர்கள், எண்டார் என்ற பேயாட்டியைப் பற்றிய கதையினைப் படிப்பார்களா? அதனைப் பயபக்தியோடும், அடக்கத்தோடும் படிக்க அவர்களால் இயலுமா? மத உணர்வோடுதான் அதனைப் படிக்க முடியுமா? அல்லது அதனை நம்புகிறோம் என்றுதான் சொல்ல அவர்களுக்கு உறுதி பிறக்குமா?

தேவதைகள் காற்றில் உலாவுகின்றன; அவைகள் ஏதும் அறியாதவர்களைப் பாதுகாக்கின்றன; அவைகள் நல்லவர்களுக்கு ஆதரவு தருகின்றன; அவைகள் தொட்டில்களைச் சூழ்ந்து நின்று குழந்தைகளுக்கு உடல்நலத்தையும், மகிழ்ச்சியையும் அளிக்கின்றன; அவைகள் இருட்டறைகளில், தங்கள் ஒளியின் மூலம் வெளிச்சத்தை உண்டாக்குகின்றன; சிறையிலடைக்கப்பட்டவர்களுக்கு அவைகள்

நம்பிக்கை அளிக்கின்றன; அவைகள் வீழ்ச்சியுற்றவர்கள்—தவறு செய்தவர்கள்—தள்ளப்பட்டவர்கள்—ஆதரவற்றவர்கள் ஆகியோரைத் தொடர்ந்துபோய், அவர்களுக்கு நன்மையும், அன்பும், மகிழ்ச்சியும் தருகின்றன. கெட்ட ஆவிகள் இல்லை என்பதற்கு எவ்வளவு காரணங்கள் உண்டோ, அவ்வளவு காரணங்கள் உண்டு, நல்ல ஆவிகள் இல்லை என்பதற்கும் என்பதை இப்பொழுது நாம் அறிவோம். பேய்களும் பூதங்களும் இடைக்காலங்களில் உலாவின என்பது எவ்வளவு பொய்யோ, அதே அளவு பொய்யான செய்திதான், ஆப்ரஹாமையும், சாம்சனுடைய தாயாரையும் தேவதைகள் கண்டு பேசின என்பதும். பலாம் என்ற தேவன் ஏறிய கழுதையை நிறுத்திய தேவதை; நெருப்புக் குண்டத்தில் நடந்த தேவதை; அசிரியர்களைக் கொன்ற தேவதை; ஜோஸப்பின் கனவில் தோன்றி ஐயங்களைப் போக்கிய தேவதை என்று சொல்லப்படும் தேவதைகளெல்லாம், ஏமாற்றுக்காரர்களின் கற்பனைகளில் உதித்தவைகளாகும். மிகப் பேரதிசயங்கொண்டவைகளாக மதக்கருத்துக்களைச் சித்தரிக்கவேண்டும் என்று ஆசைகொண்டவர்களால், இட்டுக்கட்டப்பட்டவைகளே அவைகள். ஏமாற்றுக்காரர்கள், அந்தக் கதைகளை, வயது முதிர்ந்து தளர்ந்தவரிலிருந்து, துள்ளிவிளையாடும் குழந்தைப் பருவத்தினர் வரையிலுமுள்ள எல்லோரிடமும் பரப்பினர்; எல்லாக் காலங்களிலும் பரப்பினர். அந்தக் கதைகள், அறியாதவர்களிடமிருந்து அறியாதவர்களிடம் தாவித் தொடர்ந்து வளர்ந்து வந்தன. கத்தோலிக்க நாடுகளைத் தவிர, ஏனைய நாடுகளில், சென்ற பல நூற்றுண்டுகளாக, 'இறக்கைகட்டிய தேவதை' எதுவும் பறந்துவந்து மக்களைப் பார்த்ததில்லை. உண்மைகளை அறிந்துகொள்ள முடியாத குருட்டு நம்பிக்கைகொண்ட ஒரு சில மூடர்களே, இத்தகைய 'அதிசயப் பிராணிகளை'ப் பாசாங்காகப் பார்ப்பார்கள். சான்றுகளைக்கொண்டு ஒரு முடிவுக்கு வராமல், தான்தோன்றித்தனமாக எதையும் முடிவுசெய்துகொள்ளும் ஒருசிலர் தான், அவைகள் இருப்பதாக நம்புவர். ஆஞ்செலோ என்ற சிறந்த ஓவிய நிபுணன், மாதா கோயிலை ஓவியங்களால் அழகுபடுத்தும்போது, செருப்பு போட்டுக்கொண்ட தேவதைகளை வரைந்தானும். அந்தப் படத்தைப் பார்த்த பாதிரியார் ஒருவர், "செருப்புப் போட்டுக் கொண்டிருந்த தேவதைகளைப் பார்த்தவர் யார்?" என்று ஓவியனைப் பார்த்துக் கேட்டாராம். அதற்கு ஆஞ்செலோ "தேவதைகளை வெறுங்காலோடு பார்த்தவர்கள் யார்?" என்று மறுமொழியாகக் கேட்டானும்.

தேவதைகள் வாழ்ந்தன என்பது ஒருபொழுதும் நிலைநாட்டப்படவில்லை. ஆனால், உயர்ந்ததர தேவதைகளையும், தாழ்ந்ததர தேவதைகளையும் கோடிக்கணக்கான மக்கள் நம்பிக்கொண்டு வருகிறார்கள் என்பதை நாமறிவோம். கேப்ரியல் என்ற தேவதை, மோசஸின் உடலுக்காக, பூதத்தோடு போரிட்டதையும், டேனியலைக் காப்பாற்றுவதற்காகச் சிங்கங்களின் வாய்களைத் தேவதைகள் அடைத்ததையும், ஏசுகிருஸ்துவிற்குத் தேவதைகள் போதனை புரிந்ததையும், ஏசு உலகத்திற்கு வரும்போது அவருக்குத் துணையாக எண்ணற்ற தேவதைகள் வந்ததையும் கோடிக்கணக்கான மக்கள் நம்பிக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நாம் அறிவோம். மத நூல்களில் உரைக்கப்பட்ட சான்றுகளையும்—உண்மைகளையும் மட்டும் வைத்துக்கொண்டு, குருட்டுத் தனமான போக்கில், பகுத்தறிவற்ற பக்தியன்போடு இவைகளையெல்லாம் அம்மக்கள் நம்பிவருகிறார்கள் என்பதையும் நாம் அறிவோம்!

ஆனால் இனிமேல் தேவதைகள் எதுவும் வராது! புண்பட்ட நெஞ்சத்திற்குத் தடவ அவைகள் களிம்பு எதனையும் இனி எடுத்துக் கொண்டு வாரா! நீண்ட நாட்களுக்கு முன்பே அவைகள் தமது இறக்கைகளைச் சுருட்டிக் கொண்டு, உலகிலிருந்தும் காற்றிலிருந்தும் மறைந்துவிட்டன! இந்த இறக்கை கொண்ட தேவதைகள் இனிமேல் அறியா மக்களைக் காப்பாற்ற முன்வரா; துன்புறுகின்றவர்களை மகிழ்ச்சிப் படுத்தா; ஆதரவற்றோர்க்கு ஆதரவு நல்கும் சொற்களைக் கூறு! அவையெல்லாம் கனவுகளாகிவிட்டன; மறைந்த தோற்றங்களாக மாறிவிட்டன!

'மன்றம்' சந்தா விபரம்

	உள்நாடு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்	6—0—0	7— 8—0
ஆறுமாதம் ,, ,,	3—0—0	3—12—0
தனி இதழ் ,, ,,	0—4—0	0— 5—0

'குன்றக்குடியாருக்குக் காணிக்கை!'-2

[இரா. நெ.]

ஒருவன் நல்வாழ்வு வாழவேண்டுமானால், அந்த நல்வாழ்வுக்கு அடிப்படைப் பண்புகளாக மிளிரும் அன்பு—அறம்—ஒழுக்கம்—நீதி—நேர்மை ஆகியவைகள் அவனிடம் படியவேண்டுமானால், அவன் 'சமயநெறி'ச் சார்ந்தவனாக இருக்கவேண்டும்; அந்தப் பண்புகளை அவனுக்குக்கொடுக்கும் தகுதி சமயத்திற்கே (?!) உண்டு என்னும் கருத்துப்பட குன்றக்குடியார் வரையறுத்துக் கூறிவிட்டார்.

குன்றக்குடியார் 'சமயம்' என்று குறிப்பிடும்போது 'சைவ சமயத்தை' மட்டும் குறிப்பிடுகிறாரா? அல்லது வைணவம்—வைதீகம்—கிருஸ்துவம் — இஸ்லாம்—சமணம் — பௌத்தம் ஆகிய எல்லா சமயங்களையும் உள்ளடக்கிக் கூறுகிறாரா? தெரியவில்லை! இவற்றில் எந்த ஒரு சமயத்தையும் பின்பற்றி அந்தச் சமயம் வகுத்த நெறிப்படி வாழ்க்கை நடத்தினாலும் 'நற்பண்புகள்' அனைத்தும் குடியேறும் என்கிறாரா? அல்லது சைவ சமய நெறியினைக் கடைப்பிடிப்பார்க்கு மட்டுமே அந்த 'நற்பண்புகள்' தோன்றும் என்கிறாரா? அதுவும் தெளிவாகத் தெரியவில்லை! என்றாலும் பொதுப்படையாகப் பார்க்கும்போது, 'சமயவாழ்வு' அனைத்திற்கும் சார்பாக நின்றே, குன்றக்குடியார் செப்புகிறார் என்று தோன்றுகிறது!

சமய நெறியினர் நம்பச்சொல்லும் ஆண்டவனை நம்ப மறுத்து, அவர்கள் காட்டும் ஆண்டவனுக்கும் உலகத்துக்கும் உள்ள தொடர்பையும்—ஆண்டவனுக்கும் மக்களுக்கும் உள்ள தொடர்பையும் நம்ப மறுத்துத் தம் பகுத்தறிவுக்கு ஒப்பிய நெறியினைக் கடைப்பிடிப்பவரிடத்தில், அன்பு—அறம்—ஒழுக்கம்—நீதி—நேர்மை ஆகிய நற்பண்புகளுக்கு இடமில்லை என்பது குன்றக்குடியாரின் மறைமுகமான வாதம்.

சமயங்களுக்குரிய அடையாளங்கள் எதனையும் ஏற்காமல், சமயங்கள் இடும் கட்டளைகள் எதனையும் நிறைவேற்றாமல், தமக்கும் உலகத்துக்குமுள்ள சூழ்நிலைத் தொடர்பைப் பற்றி மட்டுமே கவலைப்பட்டு, வாழ்க்கை நடத்திவரும் பகுத்தறிவு நெறியினர் எவரிடத்தும், மேற்கூறிய நற்பண்புகள் எதுவும் அறவே நிலைத்து நிற்பதில்லை என்பதைக் குன்றக்குடியார் நிரூபித்துக்காட்ட முன்வருவாரா? குன்றக்குடியாரே! 'ஆண்டவனை' வணங்காமல், 'ஆண்டவனு'க்கு வழிபாடு செய்யாமல், 'அவனு'க்கு வாழ்த்துப்பா பாடாமல், 'அவனி'டம் வரம் கேட்காமல், 'அவனு'க்குத் தேர்த்திருவிழாக் கொண்டாடாமல், 'அவனு'க்குத் தூப தீப நைவேத்தியங்கள் காட்டாமல், 'அவனு'க்கு அபிஷேக ஆராதனைகள் செய்யாமல், 'அவனு'க்குத் திருக்கல்யாணம் பண்ணிவைக்காமல், 'அவனு'க்குப் பள்ளியறை கட்டிவைக்காமல், 'அவனு'க்குப் புராணங்கள் எழுதாமல், பூணூல்—திருநீறு—திருநாமம் — திருக்கரி—திருச்சந்தனம்—குங்குமம்—வில்வம் — துளசி—உருத்திராக்கம்—நவமணி—பிறை—சிலுவை—காவியுடை—கறுப்புடை — காக்கியுடை — மஞ்சளுடை போன்ற சமயச் சின்னங்களை ஏற்காமல் நற்பண்புகளுக்கு நிலைக்களனாய் நிற்பவர்களைப், பகுத்தறிவாளர்களில் காட்டவேண்டுமா? சமய நெறியினைப் பின்பற்றாமல் மனைவி மக்களிடம் உற்றார் உறவினரிடம் அன்புகாட்டி ஆதரவாய் நிற்கும் பகுத்தறிவாளரைக் காட்டவேண்டுமா? ஏழை எளிய மாணவர்களிடம் அன்பு, இரக்கம், ஆதரவு காட்டி, அவர்களுக்குப் பொருளுதவி, உண்டியுதவி, உடையுதவி, உறையுளுதவி செய்துவரு

கிற பகுத்தறிவாளர்களைக் காட்டவேண்டுமா? ஏழை எளிய பிள்ளைகளுக்கு இலவச இரவுப் பள்ளிகளை நிறுவிச் செயலாற்றி வரும் பகுத்தறிவாளர்களைக் காட்டவேண்டுமா? இடிந்த கைலாசநாதர் கோயிலைப் பண்படுத்தி, அதிலிருந்த சிவலிங்கத்தையும், நந்தியையும் கண்காட்சிப் பொருள்களாக எடுத்து வைத்து விட்டு, அதனைப் பள்ளிக்கூடமாக மாற்றிப் பணிபுரிந்துவரும் பகுத்தறிவாளர்களைக் காட்ட வேண்டுமா! பள்ளிக்கூடங்களும் கல்லூரிகளும் நாட்டில் மிகவாகத் தழைக்கவேண்டும் என்பதற்காகத், தம்முடைய பொருளைக் கொடுத்தும், நன்கொடை திரட்டுதல்—உண்டியல் வசூலித்தல்—நாடகமாடிப் பொருள்சேர்த்தல்—சினிமாப்படம் காட்டிப் பொருள்திரட்டல் போன்ற வகைகளால் பொருளுதவி செய்தும் பாடுபட்டு வரும் பகுத்தறிவாளரைக் காட்டவேண்டுமா? புயலால் பாதிக்கப்பட்ட மக்களின் துயரத்தைச் சிறிது நீக்கவேண்டி, ரூ. 25,000-க்கு மேற்பட்ட மதிப்புள்ள கைத்தறி வேட்டி-சேலைகள் வாங்கி வழங்கப், பாடுபட்ட பகுத்தறிவாளரைக் காட்டவேண்டுமா? தாய்மொழித் தமிழின் வளர்ச்சிக்காகவும், மேன்மைக்காகவும், அதனை அழிக்க வந்த கேட்டினைத் தொலைப்பதற்காகவும் கிளர்ச்சிகள் நடத்தித் தடியடிபட்டுக் குருதிசிந்திச், சிறைக்கோட்டம் புகுந்து, சிறைவாழ்வு ஏற்றுப் பொது நன்மைக்குப் பாடுபட்ட பகுத்தறிவாளரைக் காட்டவேண்டுமா? காப்பி, டீகூடக் குடிக்காமல், வெற்றிலைப் பாக்குகூடப் போட்டுக்கொள்ளாமல், பிறர்மனை நோக்காமல் ஒழுக்கநெறியில் உயர்ந்து விளங்கும் பகுத்தறிவாளரைக் காட்ட வேண்டுமா? ஊராருக்கு உழைத்து உழைத்துச், சொந்த சொத்துக்களையும், வளமான வாழ்வையும் இழந்துவிட்ட பகுத்தறிவாளரைக் காட்ட வேண்டுமா? அன்பு பொருந்திய, அறந்தழுவிய, ஒழுக்கம் நிறைந்த, நீதிசார்ந்த, நேர்மை தங்கிய ஆனால் சமயப்பற்றை அறவே விட்ட பகுத்தறிவாளரைக் காட்டவேண்டுமா? குன்றக்குடியாருக்கு இவ்வளவையும் காணிக்கையாக வைக்கலாம்; வேண்டுமானால் இன்னமும் கூட வைக்கலாம்!

சமயப்பற்றோடு சமய நெறிநின்று வாழ்வோர் அத்தனைப்பேரும் நல்லொழுக்கம்—நற்பண்பு உடையவர்கள் போலவும், சமயப்பற்றற்றோர்—சமயநெறி நில்லாதவர்கள் அத்தனைப்பேரும் தீயொழுக்கம்—தீப் பண்பு உடையவர்கள் போலவும் குன்றக்குடியார் சென்றவிடமெல்லாம் செப்பிவருகிறார். சமய வாழ்வு வாழ்வோரில் தீயவரும்—தீயொழுக்கமுடையோரும் இருக்கிறார்கள் என்பதையும், சமயநெறியை மறுத்து வாழ்வோரில் நல்லவரும்—நல்லொழுக்கமுடையோரும் இருக்கிறார்கள் என்பதையும் குன்றக்குடியார் மறுக்க முனைவாரா? சமயநெறியில் நிற்பவர்களில் உள்ள நல்லவர்களின் விகிதாச்சார அளவை விட, பகுத்தறிவு நெறியில் நிற்கும் நல்லவர்களின் விகிதாச்சார அளவு அதிகமாக இருக்குமேயொழிய குறையாது என்பதைக் குன்றக்குடியாருக்குக் குன்றின்மீது நின்றுகூடக் கூறுவோம்' அதுபோலவே, சமய வாழ்வு வாழ்வோரிலுள்ள தீயவரின் விகிதாச்சார எண்ணிக்கையைக் காட்டிலும், பகுத்தறிவு நெறியிலுள்ள தீயவரின் எண்ணிக்கை மிகமிகக் குறைவு என்பதையும் கூடக் குன்றக்குடியாருக்கு உணர்த்துவோம். ஏனெனில் சமயத்தான் 'ஆண்டவன்' பேரில் கொண்ட அச்சம்—ஆசை காரணமாக அன்பு—அறம்—ஒழுக்கம் நீதி—நேர்மை ஆகிய பண்புகளை ஏற்றுக் கொள்ள ஒருப்படுகிறான்; ஆனால் பகுத்தறிவு வாதியோவெனில் உலகியல் கண்கொண்டு நோக்கும்போது, அந்தப் பண்புகள் வாழ்க்கைக்கு நன்மை பயப்பனவாகவும், வாழ்க்கையை ஈடேற்றுவனவாகவும் இருப்பதால், அவற்றினிடத்து நேரிடையாகவே பற்றுக் கொள்கிறான்.

அன்பு—அறம்—ஒழுக்கம்—நீதி — நேர்மை ஆகிய பண்புகள் ஆண்டவன் 'தொழிற்சாலையில்' உற்பத்தியாக்கப்பட்டு, சமயத்தலைவர்கள் எனும் 'ஏஜண்டுகள்' மூலம், உலகமக்களிடையே விற்பனையாக்கப்பட்ட 'சரக்குகள்' என்று குன்றக்குடியார் கருதுகிறார்போலும்! எனவேதான், சமயவாழ்வு வாழ்வோரிடத்தில் மட்டுமே அந்தச் 'சரக்குகள்' காணப்படும் என்றும், சமயவாழ்வு வாழ இசைபவர்களிடத்தில் மட்டுமே அந்தச 'சரக்குகள்' விற்கப்படும் என்றும், சமயப்பற்று அற்றோரிடத்தில் அந்தச் 'சரக்குகளை' விற்கச் சமயவாதிகள் ஒருப்படமாட்டார்கள் என்றும் குன்றக்குடியார் எண்ணுகிறார் போலும்!

அன்பு—அறம்—ஒழுக்கம்—நீதி — நேர்மை ஆகிய பண்புகள் 'ஆண்டவனால்' கொண்டுவந்து இறக்கப்பட்டவை அல்ல என்பதையும், 'சம

யத்'தால் முதன்முதல் கற்றுக்கொடுக்கப்பட்டவை அல்ல என்பதையும், வளர்ந்து முன்னேறி வரும் மக்கட் சமுதாயத்திடையே பகுத்தறிவால் கண்டறியப்பட்டுப், பிரித்தெடுக்கப்பட்டு, நிலைநாட்டப்பட்டு, வற்புறுத்தப்பட்டு வருபவையாகும் என்பதையும் உணர வேண்டும். மனித சமுதாய வாழ்வில் தீமை தரும் பண்புகள் யாவை, நன்மைதரும் பண்புகள் யாவை என்று நாளடைவில் ஆராயத் தொடங்கிப் பிறகே, அன்பு—அறம்—ஒழுக்கம் நீதி—நேர்மை போன்றவைகள், நன்மை தரும் பண்புகள் என்று பொதுவாக எங்கணும் ஒப்புக்கொள்ளப்பட்டனவாகும். இந்த ஒப்புக்கொள்ளப்பட்ட பண்புகளைச் சமயங்களும் போதிக்கின்றன; பகுத்தறிவு நெறியும் போதிக்கின்றது. இந்தப் பண்புகளெல்லாம், பகுத்தறிவுக்கும் மெய்—வாய்—கண் — மூக்கு — செவி என்ற ஐம்புலன்களின் அறிவுக்கும், அப்பாற்பட்டவையென்றோ, இந்தப் பண்புகளெல்லாம் நம்பப்படவேண்டியவையே யொழிய, உணரப் படமுடியாதவை என்றோ, இவற்றைக் கற்பனையில் மட்டுமேதான் காணமுடியும் என்றோ பகுத்தறிவு நெறி ஒருநாளும் கூறியதில்லை. இந்தப் பண்புகளுக்கும் உலகியலுக்கும் தொடர்பு உண்டு என்று பகுத்தறிவு நெறி கருதுகிறது; எனவேதான் இவைகளைப்பற்றிப் பகுத்தறிவுநெறி கவலைப்படவேண்டிய அளவுக்குக் கவலைப்படுகிறது.

இந்தப் பண்புகளுக்கு கொடுக்கப்படும் அளவும்—தன்மையும் நாட்டுக்கு நாடு, ஊருக்கு ஊர், இனத்திற்கு இனம், சமயத்திற்குச் சமயம், வகுப்புக்கு வகுப்பு, குடிமுறைக்குக் குடிமுறை வேறுபடுகின்றனவே யொழிய, அகில உலகத்துக்கும் ஒரேமாதிரியாக வரையறுக்கப்பட்டனவாக இல்லை. ஒரு நாடோ அல்லது சமூகமோ அல்லது சமயமோ அல்லது வகுப்போ ஒழுக்கம் என்று மேற்கொண்ட ஒன்றைப், பிற நாடோ, சமூகமோ, சமயமோ, வகுப்போ அப்படியே ஒழுக்கம் என்று ஏற்றுக் கொள்வதில்லை; சிலவேளைகளில் நேர்மாறான ஒன்றையே ஒழுக்கமெனக் கொண்டுவிடுகின்றன. அதுபோலவே ஒரு நாட்டுக்கு நீதி என்று படும் செயல், மற்றொரு நாட்டுக்கு நீதி என்று படுவதில்லை. ஒரு சமயத்திற்கு அறம் எனப் படுவது, மற்றொரு சமயத்திற்கு அறம் என்று படுவதில்லை. ஆனால் உலகம் முழுவதும் உள்ள நாடுகள்—சமூகங்கள் — இனங்கள் — வகுப்புகள்—சமயங்கள்—பிறநெறிகள் எல்லாமும் கொண்டிருக்கிற கருத்துக்களை ஒப்பு நோக்கினால், உலகம் முழுவதும் ஒப்புக்கொள்ளக் கூடியதான பொதுவான அன்பு—அறம்—ஒழுக்கம்—நீதி—நேர்மை முதலிய சில பண்புகளை எடுக்கலாம். அப்படிப்பட்ட பண்புகளைக் காப்பாற்ற குன்றக்குடியாரோ அல்லது பிற சமயத்தவரோ எவ்வளவு பாடுபடுவார்களோ, அதே அளவு அல்லது அதற்கு மேலாகப் பாடுபடவே பகுத்தறிவு நெறியினரும் இருந்து வருகிறார்கள்.

ஒருவன் ஆண்டவனிடம் பற்றுவைத்திருந்தாலும், வைக்காவிட்டாலும், அன்புடையவனாக வாழமுடியும்; ஒருவன் திருநீறு பூசினாலும், பூசாவிட்டாலும் அறம்செய்பவனாக இருக்கமுடியும்; ஒருவன் ஆண்டவனை வழிபட்டாலும் வழிபடாவிட்டாலும் ஒழுக்கமுடையவனாக இருக்கமுடியும்; ஒருவன் உருத்திராக்கக் கொட்டை கட்டிக்கொண்டாலும், கட்டிக் கொள்ளாவிட்டாலும் நீதிபுரிபவனாக உலவ முடியும்; ஒருவன் காவிவேட்டி கட்டிக் கொண்டாலும், கட்டிக்கொள்ளாவிட்டாலும் நேர்மையாளனாக இருக்கமுடியும் என்பதைக் குன்றக்குடியாருக்குக் காணிக்கையாக வைக்கிறோம். சமயந்தான் ஒழுக்கத்தைக் காப்பாற்றும், பகுத்தறிவு நெறி ஒழுக்கத்தைக் காப்பாற்றாது என்னும் கருத்தினைப் பரப்பிவரும் குன்றக்குடியாரே! நாட்டில் திருடுபவர்கள், கொலை செய்பவர்கள், வஞ்சிப்பவர்கள், சூது சூழ்ச்சி செய்பவர்கள், காமக்களியாட்டம் நடத்துபவர்கள், பச்சைப் பொய் சொல்லுபவர்கள், நேர்மையற்றவர்கள், நீதியற்றவர்கள், நாணயமற்றவர்கள், நாகரிகமற்றவர்கள், கண்ணிய மற்றவர்கள், குடிகுடிப்பவர்கள், கஞ்சாச் செடி பயிரிடுபவர்கள் அத்துணைப்பேரும் சமய வாழ்வை வெறுத்தவர்களல்லர்; நீர் குறிப்பிடும் சமயப்பற்றோடு, சமயச் சின்னங்கள் தரித்து, ஆண்டவனை நம்பி, வழிபட்டு வருபவர்களின் எண்ணிக்கைதான் அவர்களில் ஏராளம் என்பதை உணரும்! பகுத்தறிவு நெறியாவது உலகியலை அறிந்து கூறுவது; மெல்லமெல்லத்தான் தீமையையும் துன்பத்தையும் போக்கி, நன்மையையும் இன்பத்தையும் மனித சமுதாயத்திற்கு ஊட்டமுடியும் என்று சொல்லுவது; காட்டுமிராண்டி நிலையிலிருந்து அப்படித்தான் சமுதாயம் நகர்ந்துவந்திருப்பதாகக் காட்டுவது; ஆனால், 'எல்லாம்வல்ல ஆண்டவன்' துணையோடு

அ. அக்கிஹோத்ரர் [illegible]

வினாவும் விளக்கமும்

திராவிட முன்னேற்றக் கழகம், கட்சியின்போல் தனித் தொழிற்சங்கம் வைத்து நடத்தாததேன்?

திராவிட முன்னேற்றக் கழகம், தன் பெயரால் தொழிற்சங்கம் வைத்து நடத்தாததற்குக் காரணம், அதனால் அப்படி ஒரு அமைப்பு நிறுவி நடத்த முடியாது என்பதற்காகவல்ல, அப்படி ஏற்படும் ஒரு அமைப்பின் மூலம், தொழிலாளர்களின் பொது உறவுக்கும் ஒற்றுமைக்கும் மேலும் ஊறு ஏற்படுத்துவதாக அது அமைந்துவிடக்கூடாது என்பதற்கேயாகும். இந்த எண்ணம் உண்மையான உள்ளத்தின் அடிப்படையிலும், நேர்மையான ஜனநாயகப் பண்பின் அடிப்படையிலும், நாகரிகமான அரசியல் கருத்தின் அடிப்படையிலும் எழுவதாகும்.

இதனால் திராவிட முன்னேற்றக் கழகம் தொழிற்சங்க அமைப்பை வெறுக்கிறது என்று யாரும் கொண்டுவிடக்கூடாது. தி. மு. கழகம், தனித் தொழிற்சங்கம் வைத்து நடத்தவில்லையே தவிர, தி. மு. கழகத்தைச் சார்ந்தோர் பல்வேறு தொழிற்சங்கங்களில் ஈடுபட்டுப், பங்கு ஏற்றுப், பணிபுரிந்துதான் வருகிறார்கள். தி. மு. கழகம், தன்னைச் சார்ந்த தொழிலாளத் தோழர்கள், தொழிற்சங்க அமைப்பில் பங்கு கொண்டு, உரிமைகளைப் பெறவும், கடமைகளைச் செய்யவும் பாடுபடவேண்டும் என்றுதான் வற்புறுத்தி வருகிறது.

வாழும் 'சமயம்' ஏன் இத்தத் தீமைகளையும் துன்பங்களையும் அடியோடு அகற்ற முன்வரவில்லை? எத்துணையோமுறை, 'ஆண்டவன் வந்திருக்கிறான்; 'அவதார புருஷர்கள்' பலர் உலகத்திற்கு வந்திருக்கிறார்கள்; 'ஆண்டவன் தூதுவர்கள்' வந்திருக்கிறார்கள்; அடியார்கள்—நாயன்மார்கள்—ஆழ்வாராதிகள்—சித்தர்கள்—முத்தர்கள் — பண்டாரசன்னதிகள் — பரதேசிகள்—தம்பிரான்கள்—சிவநேசச் செல்வர்கள்—மெய்யன்பர்கள் ஆயிரக்கணக்கில், இலட்சக்கணக்கில் வந்திருக்கிறார்கள்! அவர்கள் துணைபெரும் கொண்டிருந்த 'எல்லாம் வல்ல ஆண்டவன்' உலகம் முன்னேற இம்மி அளவு உதவி செய்தானா? 'எல்லாம் வல்லவன்' எல்லாம் செய்திருந்தால், உலகில் துன்பமும் தொல்லையும் இருந்திருக்காதே—இருந்திருக்கக் கூடாதே! 'ஆண்டவனை' நம்பினவனாயிருந்தாலும் சரி, நம்பாதவனாயிருந்தாலும் சரி, அவனவன், அவனவன் பகுத்தறிவு சொல்லிய அளவுக்குத்தான், உலகில் கொண்டுபுரிந்துவந்திருக்கிறானேயொழிய, 'ஆண்டவன்' தனியாக ஏதும் செய்யவில்லை!

எனவே, அன்பு—அறம்—ஒழுக்கம்—நீதி—நேர்மை ஆகிய பண்புகளிடத்து உண்மையான பற்று வைத்து, யார் யார் எந்த அளவுக்கு அவற்றைத் தம்வாழ்க்கையில் ஒன்றுபடுத்திக் காட்டுகிறார்களோ, அவர்கள்தாம் அந்தப் பண்புகளுக்குரியவர்களாகத் திகழ்கிறார்கள்; அவர் சமயநெறியினராயினும் சரி, அல்லது பகுத்தறிவு நெறியினராயினும் சரி! ஆண்டவனிடம் பக்தி செலுத்திக், திருநீறுபூசி, உருத்திராக்கம் கட்டிக், காவிவேட்டியணிந்து, தேவாரம் திருவாசகம் ஓதியவரிடத்தே இந்த அரும் பண்புகள் நிலைக்கும், பிறரிடத்தே நிலைக்கா என்ற கூற்று எவ்வளவு அறியாமை நிரம்பியது என்பதைக் குன்றக்குடியார், 'பீடம்' ஏறியிருக்கும் பெருமையால் மறந்துவிடுகிறார்போலும்! ஒருவன் அன்புடையவனாயிருக்க, அறந்தழுவியவனாக வாழ, ஒழுக்கமுடையவனாக நிலைக்க, நீதியுடையவனாக நிலவ, நேர்மையுடையவனாக உலாவ ஆண்டவன் பற்றும் சமயப்பற்றும் அவசியமுடையன அல்ல அந்தப் பண்புகளிடத்து உண்மையான பற்று இருந்தால் போதுமானது!

(தொடரும்)

தொழிற்சங்கம் தொழிற்சங்க முறையில் அமைக்கப்படவேண்டுமே யொழிய கட்சி முறையில் அமைக்கப்படக் கூடாது என்பது தி. மு. கழகத்தின் உயரிய நோக்கமாகவும், நாட்டில் நிலவும் பல்வேறு கட்சிகளின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் ஒரே மனதாகப் பெறுமளவில் பெறும் தன்மையில் தொழிற்சங்கம் வளரவேண்டுமே ஒழிய, மாற்றுக் கட்சிகளின் பகைமையையும் தொல்லையையும் சம்பாதித்துக்கொள்ளும் அளவில் கட்சி முறையில் தொழிற்சங்கம் வளருதல் கூடாது; அப்படிப்பட்ட தொழிற்சங்கம் போதுமான அளவு நன்மையைத் தொழிலாளர்க்குச் செய்ய முடியாமற் போகும். பல்வேறு அரசியல் கட்சிகளின் ஆதரவையும், துணையையும் பெறுமளவில் தொழிற்சங்க அமைப்பு இருக்கவேண்டுமேயல்லாது, ஒரு தனிப்பட்ட கட்சி ஆட்டிப் படைக்கும் கைப்பாவைப் பொருளாக அது மாறிவிடக்கூடாது. தொழிற் சங்கம் ஒரு பூங்கொடியாகவும், அரசியல் கட்சிகள் அது படரும் கொம்புகளாகவும் இருக்கவேண்டும்; அப்பொழுது அரசியல் கட்சிகளால், தொழிற்சங்கத்துக்கு நன்மை ஏற்படும். தொழிற்சங்கத்தை ஒரு கொழு கொம்பாக நினைத்து, அரசியல் கட்சிகள் அதில் போட்டி போட்டுக் கொண்டு படர முனைந்துவிடுமேயானால், தொழிற் சங்கம் பல்வேறு பிரிவுகளாகச் சிதறுண்டுபோய்த், தம்முள் பகைத்துக்கொண்டு அழிந்து பட்டுப்போய்விடும்.

ஒரு தொழில் துறையிலுள்ள தொழிலாளர்கள் அனைவரும், ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியைச் சேர்ந்தவர்களாக இருப்பார்கள் என்று எண்ணுவதோ அல்லது இருக்கவேண்டும் என்று வற்புறுத்துவதோ தவறு. எடுத்துக்காட்டாக ஒரு பஞ்சாலையை எடுத்துக் கொள்ளுங்கள். அதிலுள்ள தொழிலாளர்களில் சிலர் காங்கிரஸ்காரர்களாகவும், சிலர் தி. மு. கழகத்தவராகவும், சிலர் தி. கழகத்தவராகவும், சிலர் கம்யூனிஸ்டுகளாகவும், சிலர் சோஷியலிஸ்டுகளாகவும், சிலர் இந்துமகாசபைக்காரர்களாகவும், சிலர் முஸ்லீம் லீகினராகவும், சிலர் கட்சி சார்பற்றவர்களாகவும் தாம் இருப்பார்கள். அவர்கள் அத்துணைப்பேர்க்கும் இருக்கும் குறைபாடுகளும், கேட்கப்படவேண்டிய கோரிக்கைகளும், எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளும் ஒரே தன்மையனவாகத்தானிருக்கும். அவர்கள் அத்துணைப்பேரும் ஒன்றாக ஒரே அமைப்பாக நின்று போராடினால்தான் குறைபாடுகள் நீங்கும்; கோரிக்கைகள் நிறைவேறும். இந்த நிலை ஏற்படவேண்டுமானால் அத்துணைப்பேர்க்கும் ஒரே தொழிற்சங்க அமைப்பு இருந்தால்தான் ஆகும். ஒரே தொழிற்சங்க அமைப்பு இருக்கவேண்டுமானால், பொதுத் தன்மையில் தொழிற் சங்கம் நிறுவப்பட்டால்தான் முடியும். பொதுத் தன்மையில் தொழிற்சங்கம் நிறுவப்படவேண்டுமானால், அந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை முன்னிறுத்திச் சங்கம் அமைக்க முற்பட்டால்தான் ஆகும். அப்படிக்கில்லாமல் கட்சிப் பிரச்சினைகளை முன்னிறுத்திச் சங்கம் அமைக்க முற்பட்டால், கட்சிகளின் எண்ணிக்கை அளவுக்குப் பிளவுகளின் எண்ணிக்கையும் வளருமேயொழிய, ஒரே சங்கத்தை—ஒற்றுமையை — நல்லுறவை தொழிலாளரிடையே காணமுடியாமற் போய்விடும்.

பஞ்சாலைத் தொழிற்சங்கக் கூட்டத்தில் நுழைகிறவர்கள், பஞ்சாலைத் தொழிலாளர்கள் என்ற உணர்வோடு மட்டும் நுழைந்து, தொழிலாளர்கள் பற்றிய பிரச்சினைகளை மட்டும் பேசி, அவை பற்றிய முடிவுகளை மட்டும் எடுத்துக், கலைந்துபோகும்போது, காங்கிரஸ்காரன் காங்கிரஸ் கூட்டத்துக்குப் போகட்டும்; கம்யூனிஸ்டு அவன் ஆபீஸுக்குச் செல்லட்டும்; தி. மு. கழகம், தி. கழகம், சோஷலிஸ்டு, இந்து மகாசபை, முஸ்லீம் லீக் ஆகியவற்றைச் சேர்ந்தவர்கள் அவரவர் கூட்டத்திற்குச் செல்லட்டும். தொழிற் சங்கத்துக்கு, மூவர்ணம்—அறிவாள் சுத்தி—பட்டைச் சிவப்பு கறுப்பு—வட்டச் சிவப்பு முழுக்கறுப்பு—ஏர் சங்கரம்—கத்தி—பிறை என்ற கட்சிக்கொடிகளில் எந்தக் கொடியை வைத்துக்கொள்ளுவது என்ற விவாதத்தில் இறங்காமல், தொழிலாளர் பண்பை உணர்த்தும் பொதுக்கொடியொன்றை தேர்ந்தெடுத்துக்கொள்ளட்டும். சங்கக் கட்டிடத்தில் பண்டித நேரு—ஸ்டாலின் — பெரியார் — அண்ணா—ஜெயபிரகாஷ் நாராயணன்—சவர்க்கார்—ஜின்னா ஆகியவர்களில் யார் படத்தை மாட்டுவது என்ற விவாதத்தில் இறங்காமல், அவரவர் கட்சிக்கட்டிடங்களிலே அவரவர்க்கு விருப்பமான தலைவர்களின் படங்களை மாட்டிக் கொள்ளலாம் என்று கூறிவிட்டு, அந்தத் தொழிற் சங்கத்துக்குச் சம்பந்தப்பட்டவர்களின் படங்களைத், தேவையானால், ஒரேமனதாக மாட்டிக்கொள்ளட்டும். தொழிற்சங்கத்

தைத், தொழிற்சங்க முறையில், திறமையுள்ளவன், அவன் தொழிற்சங்கத்திற்குள் இருப்பவனாயினும், வெளியே யிருப்பவனாயினும் சரி, அவன் எந்தக்கட்சியைச் சார்ந்தவனாயினும் சரி பொதுத்தன்மையில் நடத்தப்படும். இந்தப் பொதுநோக்குடன் தொழிற்சங்கம் அமைந்தால், தொழிற்சங்கத்தில் பிளவுகள் ஏற்பட வழியில்லை; மேலும் எல்லாக் கட்சிகளிடத்திலிருந்தும் ஆதரவும் ஒத்துழைப்பும் பெருகும்.

எடுத்துக்காட்டாக, சென்னை மாநிலத்தில் தபால்-தந்தி இலாகா ஊழியர்கள் சங்கத்தையும், மாஜி இராணுவத்தினர் சங்கத்தையும் எடுத்துக்கொண்டால், அவைகள் எந்தக் கட்சியாலும் ஆட்டிப்படைக்கப்படாமல், பொதுவாக வளர்ந்து வருவதால், பிளவு ஏற்படாமல் வளருகின்றன; எல்லாக் கட்சித் தலைவர்களும் அவற்றின் மாநாடுகளில் கலந்துகொள்கிறார்கள்; போராட்டக் காலங்களில் எல்லாக்கட்சிகளும் தம்தம் ஆதரவை நல்க வரிந்துகட்டிக்கொண்டு வருகின்றன.

சில பஞ்சாலைத்தொழிற்சங்கத்தை எடுத்துக் கொண்டால், காங்கிரஸ் கட்சியின்பேரால் ஒரு சங்கமும், கம்யூனிஸ்டுக் கட்சியின் பேரால் ஒரு சங்கமும், சோஷலிஸ்டுக் கட்சியின்பேரால் ஒரு சங்கமும், பிற தனிப்பட்டவர்களின் பேரால் சில சங்கங்களும் ஆகப் பிளவுபடுத்தப்பட்டுச் சின்னாபின்னமாகிக்கிடக்கின்றது. வெளியுலகில் அரசியல் கட்சிகளுக்குள் ஏற்படும் சண்டை சச்சரவுகள், தொழிற் சங்கங்களுக்கிடையேயும் அந்த அந்த அளவுக்கு ஏற்பட்டு விடுகின்றன. இதனால் கட்சிகளின் பலமும்—பேருமும்தான் பரீட்சிக்கப்படுவனவாகுமே யல்லாமல், தொழிலாளர் நலம் பேணப்படுவதாகக் காணமுடியாது. ஒரு கட்சித் தொழிற்சங்கம் நியாயமான முறையில் போராட்டம் துவங்கினாலும், மாற்றுக்கட்சித் தொழிற்சங்கம் அதற்கு எதிரிடையாக வேலை செய்து போராட்டத்தைச் சீர்குலைக்கச் செய்கிற காட்சிகளை அவ்வப்போது நாடு பார்த்துக்கொண்டுதான் வருகிறது. தொழிற்சங்கங்கள் கட்சி முறையில் பிளவுபட்டு, ஒன்றோடொன்று மோதிக்கொள்வதால், முதலாளிகளுக்குத்தான் நன்மை ஏற்படுகின்றதே தவிர, தொழிலாளர்க்கு நன்மையாக முடிவதில்லை. இந்த நிலையில் தி. மு. கழகம் மேலும் ஒரு பிளவு ஏற்படுத்துவது நலம் பயப்பதாகுமா என்று எண்ணி, அஞ்சிக் கொண்டிருக்கிறது. ஒவ்வொரு இடத்திலும் தொழிற்சங்கம் நிறுவி வேலை செய்யக்கூடிய அளவுக்கு வசதியும் வலிவும், தொழிலாளர் ஆதரவும் தி. மு. கழகத்திற்குப் பெருகிக் கொண்டு வருகிறது என்பதை நாட்டவர் நன்கு உணர்வார்கள். மேலும் புதிய தொழிற்சங்கம் நிறுவுவதால் கட்சிக்கு நல்ல ஆக்கம் ஏற்படும் என்ற உணர்வும், கழகத்துக்கு உண்டு. ஆனால், தொழிலாளரின் பொது நன்மையைக் கூர்ந்து கவனிக்கும்போது, கட்சி முறையில் எந்தத் தொழிற்சங்கமும் ஏற்படக் கூடாது என்றே எண்ணுகிறது; அந்தப் படிக்கே வற்புறுத்தியும் வருகிறது.

இந்த நிலையில் தி. மு. கழகத் தொழிலாளத் தோழர்கள் செய்யவேண்டியது என்ன வென்றால்,

கட்சி முறையில் நடைபெறும் தொழிற்சங்கங்களைப் பொதுத் தன்மையில் கொண்டுவரப் பாடுபடுவது.

ஒரு குறிப்பிட்ட துறையில் சிதைந்து கிடக்கும் பல்வேறு தொழிற்சங்கங்களைப் பொதுத் தன்மையில் ஒன்றுபடுத்துவது.

வேறு கட்சிகள் நடத்தும் தொழிற்சங்கங்களின் உறுப்பினர்களாகவும், செயற்குழு உறுப்பினர்களாகவும் இருக்கும் தி. மு. கழகத் தோழர்கள் அந்தந்த தொழிற்சங்கங்களை அந்தந்தக் கட்சிகளுக்கு இரையாகவிடாமல் ஓயாமல் போராடி, அவற்றிற்குப் பொதுத்தன்மையூட்டப் பாடுபடுவது.

தொழிற் சங்கங்கள் அமைக்காத துறைகளில், முனைந்து நின்று பாடுபட்டுப், பொதுத்தன்மையில் தொழிற்சங்கங்களைப் புதிதாக நிறுவி, சிறந்த எடுத்துக்காட்டுகளாக அவற்றை நிலைநாட்டுவது.

இத்தகைய காரணங்கள்பற்றித்தான் தி. மு. கழகம் தனித் தொழிற்சங்கம் நிறுவ இன்றைய நிலையில் ஒருப்படவில்லை.

ஃ ஃ ஃ

திராவிட நாட்டின் எல்லை எது?

திராவிட நாடு என்று குறிப்பிடும்போது, தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய நான்கு மொழிகளும் தொடர்ச்சியாகப் பரவியுள்ள தென்னாட்டுப் பகுதியைக் குறிப்பிடுகிறோம்.

திராவிடம் இன்றைய நிலையில் எந்தெந்த மாநிலங்களில் சிதறுண்டு கிடக்கின்றது என்

றால் : சென்னை, ஆந்திரம், திருவாங்கூர்-கோச்சி, மைசூர், ஐதராபாத், பம்பாய், ஒரிசா முதலியன வரும். இந்த மாநிலங்களின் எல்லைக்கோடுகள், மொழி, கலை, பண்பாடு, பொருளாதாரம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு கிழிக்கப்பட்டவைகளா என்றால், இல்லவே இல்லை! வெள்ளைக்காரனுடைய துப்பாக்கிமுனை, உள்நாட்டு மன்னர்களோடு செய்துகொண்ட உடன்படிக்கையின்படி, தன் விருப்பப்படி கிழித்துவைத்த எல்லைக்கோடுகளேயாகும். வெள்ளையன் அகன்றான்; எனவே அவன் தாறுமாறாகக் கிழித்துவைத்த எல்லைக்கோடுகளும் அழிக்கப்படவேண்டியனவாகிவிட்டன.

இப்பொழுதுள்ள சென்னை, ஆந்திரம், திரு-கொச்சி, மைசூர், ஐதராபாத், பம்பாய், ஒரிசா ஆகிய மாநிலங்களின் எல்லைக்கோடுகளை அடியோடு அழித்துவிட்டு, தமிழ் வழங்கும் பகுதியை, சித்தூர்ப்பகுதி, நாஞ்சில் நாட்டுப்பகுதி, பிரெஞ்சிந்திய திட்டுப்பகுதி உள்பட தமிழகமாக்கி, ஆந்திரம், மைசூர், ஐதராபாத், ஒரிசா ஆகிய மாநிலங்களிலுள்ள தெலுங்கு வழங்கும் பகுதியை ஆந்திரமாக்கி, சென்னை, மைசூர், ஐதராபாத், பம்பாய் ஆகிய மாநிலங்களிலுள்ள கன்னடம் வழங்கும்பகுதியைக் கருநாடகமாக்கி, சென்னை, திரு-கொச்சி ஆகிய மாநிலங்களிலுள்ள மலையாளம் வழங்கும் பகுதியைக் கேரளமாக்கி, மொழிவழி பிரிக்கப்படும் இந்த நான்கு பகுதிகளையும் ஒன்றுசேர்த்தால், அமையும் இனவழித் திராவிடமே நாம் விரும்புவது. அப்படி அமையும்போது மூன்றுபுறம் கடல்கள் எல்லைகளாகவும், ஒருபுறம் அதாவது வடபுறம் மராட்டியம்—உட்கலம்—வங்கம் ஆகியவை எல்லைப்புற மாநிலங்களாகக் கிடக்கும்.

மொழிவழி பிரியும் ஐக்கிய தமிழகம், விசால ஆந்திரம், சம்யுக்த கன்னடம், ஐக்கிய கேரளம் ஆகியவை நான்கும் சேர்ந்த நிலப்பரப்பே திராவிடத்தின் நிலப்பரப்பு என்பதை எல்லை வினவும் தோழர்கள் உணர்க.

வேங்கடத்தைத் தமிழகத்தின் வடவெல்லையாகக் கூறுவது எப்படிக் குத்துமதிப்பான கணக்கோ அதேபோல்தான், விந்தியத்தைத் திராவிடத்தின் வடவெல்லையாகக் குறிப்பிடுவதும். திராவிட நிலப்பரப்பின் வடவெல்லை நேர்கோட்டின் மூலம் விந்தியத்தைத் தொடுவதாலும், வடநாடு—தென்னாடு என்று பிரிக்க விந்தியத்தையே மையப்பகுதியாக வரலாற்றாசிரியர்கள் குறிப்பிட்டதாலும், விந்தியத்தை திராவிடத்தின் வடக்கு எல்லையாகக் குறிப்பிடுவது குத்துமதிப்பாகப் போடும் கணக்காகும்.

வடக்கே வேங்கடம், தெற்கே குமரி, கிழக்கேயும் மேற்கேயும் கடல்கள் தமிழகத்தின் எல்லைகளாகின்றன என்று கூறுகிறார்கள். வேங்கடத்தை வைத்து நேர்கோடு கிழித்து, அதற்குத் தெற்கேயுள்ள பகுதியெல்லாம் தமிழகமா என்று பார்த்தால், மைசூரில் ஒரு பகுதியும், திரு-கொச்சி முழுவதும் தமிழகமாகச் சேர்த்துக் கணக்கிடப்படவேண்டியவைகளாக இருக்கும்! அதுபோலவே விந்தியத்தின் தெற்கே உள்ள எல்லாப்பகுதிகளும் திராவிடமாகும் என்று கணக்குப் போட்டால், அது தவறாகமுடியும். வேங்கடம் எப்படித் தமிழகத்தின் வடவெல்லைக் கோடாக இல்லாமல், வடவெல்லைக்கல்லாகக் குத்துமதிப்பாக இருக்கிறதோ அப்படியேதான், விந்தியம் திராவிடத்தின் வடவெல்லைக் கோடாக அமையாமல், வடவெல்லைக் கல்லாகக் குத்துமதிப்பாக இருக்கிறது என்று கூறினால் அது தவறுடையதாகாது.

சென்னை மாகாணத்தை திராவிடம் என்று பிரித்துக்கொடு என்று சிலர் கேட்டதற்குக் காரணம், முதலில் அதனைப் பிரித்துவிட்டால், நாளடைவில் பிற பகுதிகளைத் தன்னோடு சிறுகச்சிறுகச் சேர்த்துக்கொள்ளலாம்; முழுத் திராவிடமும் வரும்வரையில் காத்திருக்கவேண்டியதில்லை என்ற கருத்திலேயேயாகும். ஆந்திரர்கள் எப்படித் தெலுங்கு வழங்கும் ஒரு பகுதியை மட்டும் ஆந்திரா என்று முதலில் அமைத்துக்கொண்டு, பிற தெலுங்கு பகுதிகளைச் சேர்த்து விசால ஆந்திரமாக்க முயலுகிறார்களோ, அதே அடிப்படையில்தான், திராவிடத்தின் ஒரு பகுதியை—எளிதில் பெறக்கூடிய பகுதியைத் திராவிடமாக்கிப், பிற பகுதிகளைப் பிற்பாடு சிறுகச் சிறுக இணைத்துக்கொள்ளலாம் என்ற கருத்திலேயேயாகும்.

தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்-கேரளம் ஆகிய நான்கும் சேர்ந்த நிலப்பரப்பைத்தான் திராவிடம் என்று குறிப்பிடுகிறோம். குறைந்த இந்தியா எப்படி இந்தியா என்றே பெயர் பெறுகிறதோ, குறைந்த பாக்கிஸ்தான் எப்படி பாக்கிஸ்தான் என்று பெயர் பெறுகிறதோ அதுபோலத் திராவிடம் குறைந்தாலும் திராவிடம் என்றே பெயர் பெறுவதில் தவறில்லை.

சிறுகதை

காதற் கடிதம்

[இரா. செழியன்]

அன்புள்ள குமுதா!

மாலை உன்னை விட்டுப் பிரிந்துவந்தபின், நீங்காத இருளில் நான் தள்ளப்பட்டிருக்கிறேன்.

அந்தி வேளைக்குப்பின் இரவு வருகிறது; இரவைக் காண்பிக்க, வட்ட நிலா வருகிறது, வானவெளியெங்கும் வயிரக் கண்கள் வாரியிறைக்கப்படுகின்றன. ஆனால் என் இதய வானத்தை ஒளி செய்ய, தனிமையெனும் இருளைப்போக்க, முகமதியே! நீ என்னருகில் இல்லை; ஒளிவிடும் கண்கள்! எங்கோ உறங்குகின்றன. அழுத்துகின்ற துன்ப இருளில் நான் தனியனாக கைகளால் துழவிக்கொண்டு தடுமாறுகிறேன், குருடனைப்போல.

துள்ளிவரும் மின்னல் ஒரு நொடிப்பொழுதில் தோன்றி மறைந்துவிடுகின்றது. ஆனால் அதைக் கண்ட கண்கள், நீண்டநேரம்வரை வேறெதையும் காணமுடியாமல் மங்கிவிடும். அதைப்போல ஒரு நாளில் சில விநாடிகளே உன்னைப் பார்க்கிறேன். ஆனால் அதற்குப்பின் நாள் முழுவதும் கண்ணும் கருத்தும் மங்கித் திரிகிறேன்.

அந்தச் சில விநாடிகள்! அதற்காக எவ்வளவு ஆவலுடன் நான் காத்திருப்பேன் தெரியுமா? கெடிகாரத்தின் கைகள் ஐந்துமணியை அணுகுவதுதான் தாமதம், உடனே வேலையை மூடிவிட்டு, கூண்டிலிருந்து விடுபட்டப் பறவையைப்போல ஓடிவருவேன், சத்தம் குறையாத சந்தைக் கடையைக் கடந்து, நீண்ட தெருவைக் கடந்து, சிறு குடிசைகளைப் பின்னே போகவிட்டு, ஆற்று மணல் வெளியைத் தள்ளி, ஓரத்தே மணல் முட்டுகளிடை வளைந்து செல்லும் வாய்க்காலைத் தாண்டி, கடைசியாக அடர்ந்த மாந்தோப்புக்கு வந்துசேருவேன். நீ ஐந்தரை மணிக்குமேல் வருவதாகத்தான் சொல்லியிருப்பாய். இருந்தாலும், அதற்குள் வந்திருப்பாயோ என்ற ஆவலில், மாந்தோப்பில், தழை மலிந்த சாரலில், பார்ப்பேன். நீ நிச்சயமாக இருக்கமாட்டாய்! கைக்கெடிகாரத்தை பார்த்தவண்ணம், கலங்குகிற மேற்றிசை வானத்தைப் பார்த்தவண்ணம் நான் மாந்தோப்பில் உலவிக்கொண்டிருப்பேன்.

வேலை முடிந்து, கலப்பை தூக்கி உழவர்கள் வருவார்கள். மேயச் சென்ற மாடுகளைத் திருப்பிக்கொண்டு இடையர்கள் செல்வார்கள், சாலையிலிருந்து வண்டிக்காரன் பாடுகிற தெம்மாங்கு காற்றிலே கலந்துவரும். இடையிடையே வண்டிமாடுகளின் கழுத்திலிருக்கும் மணி யசைய, ஒலிசெய்யும். இரைதேடிச்சென்ற பறவைகளும் கூச்சலிட்டுத் திரும்பும். வட்டமிடும் பருந்தும், சத்தமிடும் சிட்டும் தம்மிடம் நோக்கிச் செல்லும். பெட்டை ஓடிவிட, அதைத்தேடி மணிப்புறு பறந்துவரும். அந்தி மயங்கிவரும், தென்றல் அசைந்துவரும், மலர்கள் வரும், நறுமணம் வரும், என் குமுதா குறித்த நேரமும் வரும். ஆனால் அவள் மட்டும் வரமாட்டாள்.

நான் காத்திருப்பேன், தோப்பிலே சுற்றி வந்து கால் கடுத்துவிடும், நீ வரும் திக்கைப் பார்த்து கண்களும் பூத்துவிடும். எவ்வளவு நேரம் இவ்வாறுகக் காத்திருப்பது? இல்லை, அதோ! சத்தம் கேட்கிறது. ஓடிவந்து, பார்ப்பேன். மாவிலை மெத்தையில் அணில்கள் குதித்து ஓடிக்கொண்டிருக்கும்.

கடைசியாக அலுத்துப்போய், கண்கள் இருண்டு, தலையைத் தாழ்த்தி உட்காரப் போகும்பொழுது, மாவிலைகளின்மேல் காலடியோசை கேட்கும். இப்பொழுது பொய்யல்ல, நீதான்! என் குமுதமே, என் கோமளமே தான்! இதுவரை நான் கொண்ட அலுப்பு,

பட்ட துன்பம் எல்லாம் உன்னைக் கண்டதும் எங்கோ மறைந்துவிட்டது.

என் இன்பமே! எழில் வளரும் ஏந்திழையே! ஏன் இவ்வாறு பெருமூச்சு வாங்க, களைப்புற்று இருக்கிறாய்? ஓடிவந்தாயோ உன் சிற்றடிகள் நோக, தேடிவந்தாயோ தேன்மலர்ச் சோலையெங்கும்!

நீ களைப்புடன் இருப்பதைப் பார்க்கும் பொழுது எனக்கும் எதுவும் பேசத் தோன்றாது. உன் விழியிலே வழியும் களிப்பு, முகத்திலே அரும்பும் புன்னகை—இதுவே போதும்!

ஒவ்வொரு நாளும், பேச ஆரம்பிக்கும் பொழுது, "காக்கவைத்துவிட்டேனா, கண்ணாளா?" என்று நீ கேட்க மறப்பதில்லை, "இல்லை, என் காதலே!" என்று பதில் தர நானும் தவறியதில்லை. அப்படிச் சொல்லும் பொழுது நான் எதையும் மறைக்கவில்லை, உண்மையில் காத்திருந்தது, நேரங்கடந்தது, எல்லாவற்றையுமே நான் மறந்துவிட்டேன். என்னெதிரே என் குமுதம் இருக்கிறாள் என்பது மட்டும்தான் நினைவிலிருக்கும்.

நீ ஏதேதோ பேசுவாய்—கண்ணாடிப் பொம்மை உடைந்தது, வீட்டுக் கதவுக்கு வண்ணம் பூசியது, புதிய பொன் நகை வந்தது, தோட்டத்துச் செடியில் முல்லைப் பூக்கள் மலர ஆரம்பித்தது,—நீ என்ன பேசுகிறாய் என்பது கூட எனக்குத் தெரியாது. ஏதோ பேசிக்கொண்டிருக்கிறாய் என்பதுமட்டும்தான் தெரியும். அதுவே எனக்குப் போதுமானதாக இருக்கும்.

உன்னிடம் ஆயிரம் பேசவேண்டும் என்று கணக்கிட்டு வந்திருப்பேன். நம்முடைய காதலை—நம்முடைய எதிர்காலத்தைப் பற்றிப் பேச வேண்டுமென்று நான் சில சமயங்களில் பேசத் துவங்கினாலும், நீ ஒதுக்கிவிடுகிறாய். இன்றுகூட, நான் லேசாகக் குறிப்பிட்ட பொழுது உனக்குக் கோபந்தான் வந்தது.

"எங்கள் வீட்டு மாடியில் இரும்புப்பெட்டி இருக்கிறது தெரியுமல்லவா? அதற்குப் பக்கத்தில்தான்...." என்று நீ ஆரம்பித்தாய்.

"மாடி வீடுகளைப்பற்றியோ, அவற்றிலிருக்கும் இரும்புப் பெட்டிகளின் வகைகளைப்பற்றியோ, ஏதும் தெரியாதவன் நான்" என்று சொல்லிவிட்டேன். அப்படி நான் சொல்லியிருக்கவேண்டியதில்லை. உடனே உனக்குக் கோபம்வந்து, அந்த இடத்தைவிட்டுக் கிளம்பிவிட்டாய். நான் ஓடிவந்து உன்னைப் பிடித்திராவிட்டால், திரும்பிக்கூடப் பார்க்காமல் போயிருப்பாயல்லவா? குமுதா! உனக்கு எவ்வளவு கோபமும், பிடிவாதமும் வருகின்றன சமயத்தில்? சிரித்துப் பேசிக்கொண்டிருக்கும் பொழுதே திடீரென்று கோபித்துக்கொண்டு விடுகிறாய். ஆனால் சீக்கிரமே சாந்தமடைந்து விடுகிறாய்—இன்று மாலையும்கூட, கோபத்துடன் கிளம்பிய நீ, பத்தடி தூரம் வருவதற்குள்—அதை மறந்து, திடீரென்று என் கையைப்பற்றி "அதோ! அந்தப் பறவைகள் என்ன?" என்று கேட்டாய். எனக்கு என்ன தெரியும்? "அன்றிற் பறவைகள்!" என்று சொல்லிவைத்தேன்.

பிரிந்துபோவதற்கு முன், "என்மீது கோபமா, கண்ணே!" என்று கேட்டேன்.

"கோபமா? உங்கள்மீதா? கிடையவே கிடையாது. நம்முடைய காதலை அழித்து, நம்மைப் பிரித்துவிடும் இந்த உலகம் என்று பயப்படுகிறீர்களே, அவ்வாறு உங்களைப் பயமுறுத்துகிற உலகத்தின்மீதுதான் எனக்குக் கோபம் வருகிறது. நாழியாகிவிட்டது, அதோ! யாரோ வருகிறார்கள். நான் போகிறேன்" என்று நீ சென்றுவிட்டாய்.

நீ போவதைப் பார்த்தபடி, நான் மணல் திட்டின்மீது உட்கார்ந்திருந்தேன். உன் உருவம் வரவர மறைந்தது. இருள் நன்றாகச் சூழ்ந்திருந்தது. நேரம் போவது தெரியாமல், அங்கே மணல் வெளியில் உட்கார்ந்திருந்தேன். நெடுநேரமானபின் எழுந்து, பெரும் பாரத்தை மனதில் சுமந்து, நடந்தேன், பாலைவனத்தில் நடப்பவனைப்போல.

இல்லை, குமுதா! உன் காதலில் எள்ளவும் நான் குறை காணவில்லை. ஆனால் நாம் கொண்ட காதல், ஈடேறுமா? அல்லது வெற்றி காணாது, இதயத்திலேயே அழுந்தி, மறைக்கப்பட்டு விடுமா? குறைவற்ற காதலெனினும், ஊர் உலகம், உற்றார், உறவினர் அதை ஒப்புக்கொள்வார்களா? இதைச் சொல்வதற்காகக் கோபித்துக்கொள்ளாதே. நாம் கோபித்துக்கொண்டாலும், கொள்ளாவிட்டாலும், மறுத்தாலும் சரி, மறந்தாலும் சரி, நம்மிடையே இருக்கும் தடைகள்—பழக்கவழக்கங்கள், பணக்காரன்—ஏழை

என்ற பாகுபாடுகள், சாதிப்பிரிவு தரும் தொல்லைகள் இவைகள் இருக்கத்தான் செய்கின்றன.

குமுதா! நீயோ உயர்ந்த குடும்பத்தில் பிறந்தவள், பண்ணையார் வீட்டு மகள், மாடி வீட்டிலே வாழ்பவள், பெரிய மனிதர்களால் பெருமையாகப் பேசப்படும் இடத்திலிருப்பவள். நானோ, ஒரு பாமரக் குடும்பத்தில் பிறந்தவன், பணம் காசு அதிகமில்லாதவன், வேலைபார்த்து வயிறு வளர்க்கவேண்டிய ஏழையர் பரம்பரையைச் சேர்ந்தவன். இந்த இரண்டு எதிர்ப்புறங்களுக்கும் உறவு உண்டாகமுடியுமா? கேள்வி கண்டு நான் கலங்குகிறேன், நீ சிரித்துதான் பேசுவாய்.

“இதற்காகவா கலங்குவது! பெரிய இடத்தில் பிறந்த பெண்ணென்றால் அவள் நெஞ்சில் காதல் பிறப்பது கூடாது என்று கட்டளையா? மாடி வீடானாலும், மண்மேடானாலும் காதற் சோலையில் எல்லோரும் ஒன்றாகத்தான் நிற்கவேண்டும். நம்முடைய காதல் உண்மையானதென்றால், உறுதியுடையதென்றால் இவற்றைப் பற்றிக் கவலைப்படவேண்டாம். இதோ! பாருங்கள்! நான் கூறுவதில் நம்பிக்கையில்லையா?” என்று எத்தகையக் கவலையுமின்றி நீ கூறிவிடுவாய்.

கண்ணே! என் காதலே! குமுதமே! இன்பத்தின் நறுமலரே! என் இதய ஓடையில் மலர்ந்த செந்தாமரையே! செவ்விதழே! நல்லமுதே! உன்னைப் பார்க்காதிருந்தால், பார்த்தும் காதல் கொள்ளாதிருந்தால்—ஆனால் அது எப்படி முடிந்திருக்கும்? உன் எழிலார் முகத்தைக் கண்டபின், கருத்தை அள்ளிடும் கனிமொழிகளைக் கேட்டபின், நெஞ்சில் காதலையிட்டுப் பிசையும் கருவிழிகளைப் பார்த்தபின், காதல் கொள்ளாதிருப்பதும் முடிந்த காரியமா?

வெளியில் வானம்பாடி பாடிக்கொண்டிருக்கிறது; வட்ட நிலா வெண்மேகங்களிடை ஆட்டமாடி வருகிறது, ஆச்சரியத்தால் கண்ணைச் சிமிட்டிப் பார்த்தவண்ணம் நட்சத்திரக் கூட்டங்கள் வேடிக்கை பார்க்கின்றன. இப்பொழுது, குமுதா! நீ என்ன செய்துகொண்டிருக்கிறாயோ தெரியவில்லை. உறங்கிக்கொண்டிருக்கிறாயா? அல்லது, நிலா முற்றத்திலோ, தோட்டத்திலோ நின்று, என்னைப்போலவே, நிலவு வெளியைப் பார்த்து, நீண்ட கனவுகளைக் கண்டுகொண்டிருக்கிறாயா?

நீண்ட கனவு! கனவு நனவானால்....!

போதும் இத்துடன் நிறுத்திக்கொள்கிறேன், இக்கடிதத்தை.

இப்படிக்கு
உன்னைக் காதலிப்பதை மட்டும்
நிறுத்திக்கொள்ளத் தெரியாத ஏழை
மேகநாதன்.

கடிதத்தை எழுதி முடித்து மேகநாதன் உட்கார்ந்தான். அவனைத் தவிர அந்த உணவு விடுதியில் வேறு யாரும் விழித்துக்கொண்டிருக்கவில்லை. பக்கத்து அறைகளெல்லாம் அமைதியாக இருந்தன. வெளியில் குறுக்கு நெடுக்குமாக பலர் படுத்திருந்தனர், காற்றுக்காக. தனது அறையிலிருந்த விளக்கை அணைத்துவிட்டு, வெளியில்வந்து, கைப்பிடிச் சுவர் ஓரமாக மேகநாதன் நின்று பாலாடை போர்த்து உறக்கத்தில் ஆழ்ந்திருக்கும் சுற்று வெளியை—வீடுகள் தெருக்களைப் பார்த்தான். அதே தெருவில், இரண்டு மூன்று வீடுகள் தள்ளி, எதிர் வரிசையிலிருக்கும் பெரிய தோட்டமும், அதன் மத்தியில் உயர்ந்து விளங்கும் மாடி வீடும்தான், குமுதாவின் இருக்குமிடமாகும். தன் காதலி இருக்குமிடத்தைப் பார்த்து மேகநாதன், பெருமூச்சுவிட்டான். அதுவோ பெரிய மாளிகை, பரந்துகிடக்கும் தோட்டம். இவன் இருப்பதோ, சரியாகக் காலை நீட்டிக்கூடப் படுத்துக்கொள்ளமுடியாத சிறிய அறை!

மேகநாதன் அந்த ஊர்த் தாலூகா கச்சேரியில் வேலைபார்த்துவந்தான். தனக்குக் கிடைக்கும் சொற்ப சம்பளத்தை வைத்துக்கொண்டுதான் அவன் தன் வாழ்வை நடத்திக்கொள்ள வேண்டும். அதனால் அங்கிருந்த உணவு விடுதியில் சாப்பிட்டுக்கொண்டு, மேலிருந்த அறையொன்றில் குடியிருந்தான். சாப்பாட்டுக்கும், அறை வாடகைக்கும் போக, சம்பளத்தில் கொஞ்சந்தான் மிஞ்சியிருக்கும். அது, அன்றாடம் வரும் சில்லறைச் செலவுகளுக்குச் சரியாக இருந்தது. அதைவிட அதிகமான அளவு அவன் வருமானம் இல்லை, அவனும் எதிர்பார்க்கவில்லை. ஆடம்பரமற்ற வாழ்வு—ஆனால்

அமைதியான வாழ்வை அவன் நடத்திவந்தான்.

அந்த ஊருக்கு வந்த புதிதில், மேகநாதன் தனது வேலைக்குப் போவதும், வருவதும் தவிர, வேறு வகையில் பொழுது போக்குவதற்கு வழியின்றி இருந்தான். வேலை நேரம்போக, மற்ற நேரங்களில் தனது அறையிலேயே அடைந்து கிடந்தான். இரண்டொரு மாதங்கள் கழித்ததும், அவனுக்குச் சில நண்பர்கள் கிடைத்தனர். சிலர் அவனுடன் வேலை பார்ப்பவர்கள், ஓரிருவர் அவனுடன்கூட உணவு விடுதியில் குடியிருப்பவர்கள். நண்பர்கள் பெருகியதும், முன்போலன்றி, மேகநாதனுக்கு பொழுது போவது தெரியாமல் இருந்தது. ஆட்டம், பாட்டு, கச்சேரிகள், வம்பளப்பது, வாதங்கள் செய்வது, உலாவப் போவது இப்படி பலவகைகளும் அவனுடைய நேரத்தைப் பங்கெடுத்துக்கொண்டன. அதிலும், அந்த ஊரிலிருந்த ஆற்றுமணல்வெளி நண்பர்கள் கூடுவதற்கு நல்லதொரு இடமாக இருந்தது.

அமைதியும் குதூகலமும் விளங்கிட, பேச்சும் சிரிப்பும் கலந்திட, மேகநாதன் இருந்துவந்தான். அந்தச் சமயத்தில்தான் காதல் அவன் வாழ்வில் குறுக்கிட்டது.

அவனுடைய காதலுக்கு இலக்கான குமுதா, அந்த ஊர் பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள். அவளுடைய தந்தை பக்கிரிசாமி பிள்ளை, அந்தப் பக்கத்துப் பெரும்புள்ளிகளில் ஒருவர், நான்கைந்து கிராமங்களைக் கட்டியாளும் பண்ணையார். அவர் சொல்லை மீறி அந்தப் பகுதியில் எதுவும் நடந்துவிட முடியாது. அதிகாரத்திலும், பணத்திலும் குடும்பத்தின் பெயர் விளங்கியதைப் போல, அழகிலும், பண்பிலும் குமுதா விளங்கினாள். ஆனால் பெரிய குடும்பத்திலிருப்பவர்களுக்கு இருக்கிற பிடிவாதக் குணமும் குமுதாவிடம் இருந்தது. பக்கிரிசாமிப் பிள்ளை மிகக் கோபக்காரர் என்றால், அதைவிட அதிகமானக் கோபமும், பிடிவாதமும் குமுதாவுக்கு இருந்தன. அவள் கேட்பதற்குமுன் குடும்பத்திலிருக்கும் மற்றவர்களெல்லாம் பணிந்தே போய்விடுவார்கள். பட்டினி கிடந்தோ, அழுதுகாட்டியோ, எப்படியாவது தனது காரியத்தைச் சாதித்துக்கொள்வதில் அவள் சாமர்த்தியசாலி. பக்கிரிசாமிபிள்ளை எவ்வளவுதான் உருட்டி மிரட்டியபோதிலும், மற்றவர்களை அடக்கிவிடுவதுபோல,—குமுதா அவருக்கு மூன்றாவது பெண், அவளுக்குப் பின்னும் ஒரு தம்பியும், தங்கையும் இருந்தனர்—குமுதாவைப் பணியச்செய்ய முடிவதில்லை. ஆனால் குமுதாவும், வயதான பெண்ணானபின், குழந்தையிலிருந்ததைப்போல அடம்பிடிப்பதில்லை. அவளுடைய அண்ணன் பட்டணத்தில் படித்துக் கொண்டிருந்தான். அவளுடைய அக்காவுக்கு மணமாகிச் சென்றுவிட்டாள். ஆதலால், அப்பா, அம்மாவுக்கு அடுத்தபடி குடும்பத்தில் அவள்தான் பொறுப்புகளைக் கவனித்துவந்தாள். அவளுடைய தம்பியும், தங்கையும் உள்ளூர்ப் பள்ளிக்கூடத்தில் படித்துக்கொண்டிருந்தனர். பத்தாவது வரைப் படித்தபின், குமுதா நின்றுவிட்டாள். பணக்காரக் குடும்பத்தைச் சேர்ந்தவள், அழகுடையவள், சற்றுப் படித்தவள், இவ்வளவுமுடைய குமுதாவிற்கு மணம்பேச, உற்றார் உறவினர்களில் மிகப்பலர்—பணத்திலும், தரத்திலும் குறையாதவர்கள்—போட்டியிட்டுக் கொண்டிருந்தனர். ஆனாலும், ஏற்றத் தாழ்வுகளை மறந்து, தனக்கு முன்னிருந்தத் தடைகளை மறந்து, மேகநாதனின் காதல் வளர்ந்தது.

முதல் தடவையாக, அந்த ஊர்ப் பள்ளிக்கூடத்து விழாவில்தான், குமுதாவை மேகநாதன் பார்த்தான். தன் தம்பி, தங்கை இருவர்களுடன் குமுதா அங்கு வந்திருந்தாள். முடிந்து போகும்பொழுது, குமுதாவின் தம்பி வைத்திருந்த பையைப் போட்டுவிட்டுப் போனான். அதைப் பார்த்த மேகநாதன், அதை எடுத்துக்கொண்டுபோய், குமுதாவிடம் கொடுத்தான். அவள்கூட அதை மறந்துவிட்டாள். மேகநாதன் கொடுத்த பொழுதான் ஞாபகம் வந்தது. "நன்றி, நாங்கள்கூட மறந்துவிட்டோம்" என்று புன்னகையுடன் தனது நன்றியைத் தெரிவித்துவிட்டு, குமுதா போய்விட்டாள். குமுதாவின் அழகும், அவளுடைய புன்னகையும், பேச்சும் மேகநாதனின் உள்ளத்தை அப்படியேக் கொள்ளைகொண்டு விட்டன. அதன் முடிவுதான் காதற் கடிதங்கள் வளர்ந்தன.

மணி பன்னிரண்டை நெருங்கியது. வெளியெங்கும் ஓய்ந்து, நிலவொளியில் ஆழ்ந்து கிடந்தது. மாடிச்சுவரருகே நின்று அடிவானத்தைப் பார்த்துக்கொண்டிருந்த மேகநாதன், நேரமானதை அறிந்து, கடைசியாகப் பெருமூச்சுடன் குமுதாவின் வீட்டைப் பார்த்து

விட்டு—நிலவு வெளிச்சத்தில், அது மங்கி, சரியாகத் தெரியவில்லை — தன்னறைக்குள் வந்து விளக்கைப் போட்டான். மேஜையின் மேல் அவன் எழுதிய காதற்கடிதம் இருந்தது. அதை எடுத்து, முழுவதும் ஒருமுறைச் சரியாக இருக்கிறதாவென்று படித்தான். கடிதம் நன்றாகத்தான் எழுதப்பட்டிருந்தது. திருப்தியுடன் அதை எடுத்து மடித்தான். அதற்கு முன்னெழுதிய கடிதங்களைக் கணக்கிட்டான். இது மேகநாதன் எழுதுகிற பன்னிரண்டாவது கடிதமாகும்.

பெட்டியைத் திறந்து, தானெழுதிய கடிதத்தை மேகநாதன் அதில் வைத்தான். அதற்குமுன் அவன் எழுதிய பன்னிரண்டு காதற் கடிதங்களும் அங்குதானிருந்தன!

அதுதான் மேகநாதன் கொண்ட காதலில் சோகமயமானது. அவன் காதற் கடிதங்களை எழுதினனே யொழிய, அவற்றை அனுப்ப முடியவில்லை.

இருநூறு அல்லது முந்நூறு அடி தூரத்தில் தான் குமுதா வீடு இருந்தது. ஆனால் யாருக்காக அந்த கவின்பெறு காதல் கடிதங்கள் எழுதப்பட்டனவோ, அந்தக் குமுதாவிடம் அந்தக் கடிதங்கள் சேர்க்கப்படவில்லை.

மேலும், இவ்வாறு தனக்காகக் காதற்கடிதம் எழுதப்படுவதோ, பல கடிதங்கள் காத்துக் கொண்டிருப்பதோ குமுதாவுக்குத் தெரியாது. குமுதாவை மேகநாதன் காதலித்தான். ஆனால் குமுதாவுக்கு மேகநாதனை யாரென்றுகூடத் தெரியாது. மேகநாதன் கொண்ட காதல் உண்மையிலே சோகமயமானதல்லவா?

முதல் தடவையாகப் பள்ளிக்கூட விழாவில் குமுதாவை மேகநாதன் பார்த்தது உண்மை. குமுதாவின் தம்பி விட்டுப்போன பையை மேகநாதன் எடுத்துக்கொண்டுபோய் கொடுத்தபொழுது, அவள் நன்றி தெரிவித்ததும் உண்மை. ஆனால் அந்தச் சிறு நிகழ்ச்சியே, மேகநாதனின் உள்ளத்தில் நீங்காத இடத்தைப் பெற்றுவிட்டது.

பள்ளிக்கூட விழா முடிந்து மேகநாதன் தன் னிருப்பிடம் போகும்பொழுதும், குமுதாவைப் பற்றியோ, அவளைத் தான் சந்தித்ததுபற்றியோ எத்தகைய நினைவும் கொள்ளவில்லை. இரண்டு நாள் கழித்து, அவனுடைய கனவில் பள்ளிக்கூடக்காட்சி ஒருதடவை வந்து சென்றது, சிறிது மாற்றத்துடன்.

"நன்றி, நாங்கள்கூட மறந்துவிட்டோம்" என்று குமுதா மொழிந்தாள்.

"இல்லை யில்லை, அங்கே கிடந்தது. உங்களுடையதாகத்தானிருக்கும் என்று எடுத்து வந்தேன்" என்று மேகநாதன் அலட்சியமாகச் சொன்னான்.

"எங்கே வேலைக்காரனைக் காணோம்!" என்று குமுதா சுற்றிலும் தேடினாள்.

"நீங்கள் எங்கே போகவேண்டும்?" என்று மேகநாதன் கேட்டான்.

"அடுத்தத் தெரு, கடைசி வீடுதான்."

"நானும் அங்குதான் போகிறேன், வாருங்கள்!" என்று மேகநாதன் சொன்னான் அலட்சியமாக.

போகும்பொழுது மேகநாதன் பேசாமல் வழிநடந்தான். அந்தக் குமுதாவோ, தன் தம்பி தங்கையிடம் பேசுவதுபோல மேகநாதனிடம் பேச்சுக்கொடுக்க முயன்றாள், அடிக்கடிக் கடைக்கண்ணாலும் பார்த்துக்கொண்டுவந்தாள். ஆனால் மேகநாதன் எவற்றையும் கவனிக்காதது போல் வந்தான். கடைசியில் அவளுடைய வீடும் வந்தது.

"நன்றி, நீங்கள் வந்ததற்கு!" என்று குமுதா சொன்னாள்.

அப்பொழுதுதான் மேகநாதன் அந்தக் குறும்புக்காரியின் கூரிய கண்களைப் பார்க்க வேண்டி யிருந்தது. இருவரும் ஒருவரையொருவர் பார்த்தபடி நின்றனர்.

இந்தச் சமயத்தில் மேகநாதன் விழித்துக் கொண்டான்.

அதிலிருந்து மேகநாதனின் அருகில் குமுதா தோன்றி, அடிக்கடி பேசலானாள், மேகநாதன் எங்கு சென்றாலும் அவளும் தொடர்ந்து சென்றாள்.

மேகநாதன் மனதில் எழுந்த காட்சிகளும், பேச்சுகளும் வளர்ந்து, கடைசியில் காதற் கடிதங்களாக முடிந்தன, அவ்வாறு எழுதுவதில் ஒருவகை நிம்மதி அவனுக்குக் கிடைத்தது.

பெட்டியில் வைக்கப்பட்டிருந்த கடிதங்கள் ஒழுங்குமாறி இருந்தன. சில பிரிக்கப்பட்டும், அவசரமாக மடிக்கப்பட்டும் இருந்தன. யாரோ அந்தக் கடிதங்களைத் தனக்குத் தெரியாமல் படித்திருக்கிறார்கள் என்ற சந்தேகம், மேகநாதனின் உள்ளத்தை உலுக்கியது.

(அடுத்த இதழில் முடிவுறும்)

யோக் கை— இரண்டு துண்டு

உள்ளது

படம் 2

முன்னங்கையில் மடிப்பு இல்லாமல், கைக்கு மத்தியில் யோக்குடன் (வெட்டி) மடிப்பு வைத்துத் தைக்கும் கையின் விளக்கமே இது.

அளவுகள்

கை நீளம்	10	அங்குலம்.
முன்னங்கை சுற்று அளவு	5½	,,
மார்பு சுற்று அளவு	34	,,



1-ல் இருந்து 0 வரை 12 அங்.
(கை நீளம் + 2 அங். தோள்பக்கம் மடிப்புக்காக)

2-ல் இருந்து 0 வரை 6 அங்.
(1/8 மார்பு அளவு + 1¾ அங்.)

3-ல் இருந்து 2 வரை 8½ அங்.
(¼ மார்பு அளவு. 3, 2-க்கும் குறுக்குக் கோடு இணைக்கவும்)

4-ல் இருந்து 1 வரை 7½ அங்.
(முன்னங்கை லூஸ் + 2 அங்.)

5-ல் இருந்து 0 வரை 2 ,,

6-ல் இருந்து 5 வரை 5 ,,

7-ல் இருந்து 6 வரை ½ ,,

8-ல் இருந்து 5 வரை 1 அங்.

9-ல் இருந்து 2 வரை 2½ அங்.

10-ல் இருந்து 9 வரை 1 ,,

11-ல் இருந்து 4 வரை 6¼ ,,
(முன்னங்கை லூஸ் + ¾ அங்.)

B ல் இருந்து 3 வரை 2½ ,,
(B, 9-க்கும் இணைக்கவும்)

A-ல் இருந்து 6 வரை ¼ ,,

K-ல் இருந்து 8 வரை ½ ,,

11, 4, 3, B, 7, 8, 0, 2, 9, 1, 11 எண்கள் வரை கை இணைப்புகள்.

3, A, K, 0 வரை உள்ள புள்ளிகள் வைத்துள்ள கோட்டின்மீது கவர்தட்டு வெட்டி எடுக்கவும்.

யோக்கின் விளக்கம் B, 10, 11, 4, 3, B வரை வெட்டி எடுத்துக்கொள்ளவும் படத்தில் V போன்ற குறி உள்ள இடத்தில் 10, 9 எண்கள் உள்ள மேல் பக்கம் மடிப்புகள் வைத்துத் தைக்கவும்.

1, 11 மத்தியில் உள்ள கோடு வரைந்துள்ளவரை 10, 9 வரை மத்தியில் உள்ள துணியை வெட்டி எடுத்துவிடவும். 10, 11 எண்கள்வரை சேர்த்துத் தைக்கவும். 10, 11 இடத்தில் தையல் இல்லாமல்வேண்டுமானால் காகிதத்தில் முதலில் கை வெட்டிக்கொண்டு பிறகு துணியின்மீது வெட்டவும். விளக்கப்படத்தின் வடிவம்போன்று அமைந்துள்ளனவா என ஒத்திட்டுப் பார்த்து வெட்டவும்.

"ஜாதி முறை நீடிக்கும்வரை தீண்டாமையை நீக்க முடியாது. ஹிந்து சமூகம் சீர்படவேண்டுமானால், ஜாதி முறையைக் கூடிய சீக்கிரம் ஒழிக்கவேண்டியது நம் கடமையாகும். நான் பிராமணருக்கு விரோதி அல்ல. எனினும் நம் சமூகத்தின் முன்னேற்றத்திற்குப் பிராமணீயம் முக்கிய முட்டுக்கட்டையெனக் கருதுகிறேன். தற்போதைய சமூகம் சீர்கெட்டதற்கு அதுதான் முக்கிய காரணம்."

—ஜகஜீவன்ராம், ஆக்ராவில்.

Regd. No. M 6296

சேலம் மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக

இரண்டாவது மாநாடுகள்

சேலம் மார்க்கட் மைதானத்தில் அமைந்துள்ள

பரசுராம் பந்தலில், வள்ளியப்பன் அரங்கில்

நடைபெறும்

1 - 5 - 54 சனியன்று	2 - 5 - 54 ஞாயிறன்று
சமுதாய மாநாடு	**அரசியல் மாநாடு**
தலைவர் : ப. உ. சண்முகம்	தலைவர் : இரெ. இளம்வழுதி
துவக்குபவர் : கோகுல கிருஷ்ணன்	துவக்குபவர் : எஸ். முத்து

இரண்டு நாட்களிலும்

அறிஞர் அண்ணாவும்

முன்னணிச் சொற்பொழிவாளர்கள் அனைவரும்
கலந்துகொள்வர்

சி. எஸ். ஜெயராமன், நாகூர் அனிபா, கே. ஆர். செல்லமுத்து
இசை நிகழ்ச்சிகள் நடைபெறும்

தோழர் கே. ஆர். ராமசாமிக் குழுவினர் நடிக்கும்

"காதல் ஜோதி" **"ஓர் இரவு"**

நாடகங்கள் இரு நாட்களிலும் நடைபெறும்.

வரவேற்பாளர் ரூ. 5, பிரதிநிதிகள் ரூ. 3, ஆதரவாளர் ரூ. ?, பார்வையாளர் ரூ. 1,
பெண்கள் அணா 8.

மாநாட்டு அலுவலகம்: 59/815, பார்க் தெரு, சேலம்.

வ. கு தலைவர்	செயலாளர்	துணைச்செயலாளர்	பொருளாளர்
ஜி. பி சோமசுந்தரம்	பி. ராமலிங்கம்	ப. கண்ணன்	பி. எம். குப்புசாமி.

தோ. ப தலைவர்	தோ. ப து தலைவர்	அலுவலக பொறுப்பாளர்
இரா. தாண்டவன்,	பி. எம். கோபால்,	வி. சிவப்பிரகாசம் பி. ஏ.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M. A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St. Mannadi, MADRAS 1.